**கவனிக்க**.- 2026.02.20 ஆந் திகதிய 2477 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ்மொழிமூலம்) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2478 - 2026 පෙබරවාරි මස 27 වැනි සිකුරාදා - 2026.02.27

2478 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 450 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 502 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, மாச்சு மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

447 - B 82767- 403 (2026/02)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

## முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப - வகை 2 சேவை வகுதியின் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப - வகை 2 சேவை வகுதியின் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பாக இங்கு கீழே காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்யும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. மேற்படி ஆட்சேர்ப்பானது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப - வகை 2 சேவை வகுதியின் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பாக மேற் கொள்ளப்படுகின்றது. விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி 2026.03.27 ஆகும்.

02. **சேவை நிபந்தனைகள் :**

(அ) அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலக்கம் 1986/2 மற்றும் 2016.09.26 ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளி யிடப்பட்ட விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் சேவைப் பிரமாணத்தில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அப் பிராமணக் குறிப்பிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும், பொதுச்சேவை ஆணைக் குழுவின் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள், தாபனக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு கீழ்ப்பட்டதாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஒருவர் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்படுவார்.

(ஆ) இந் நியமனம் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உடையதுமாகும். இந் நியமனம் ஓய்வூதியம் உடையது எனக் காட்டப்பட்டிருப்பினும், எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் ஓய்வூதிய சம்பள முறைமை பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய சம்பள முறைமைக்கு/தபுதாரர் அல்லது அநாதைகள் ஓய்வூதிய சம்பள முறைமைக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் விதமாக தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புப் பணத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

(இ) இந் நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டது. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப - வகை 2 சேவை வகுதியின் (MT - 02 -2025) விளையாட்டு உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருட காலத்திற்குள் ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிமுறைகளில் குறிப்பிடப்பட்டவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஈ) தனக்கு அளிக்கப்படும் பதவியின் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் நியமனங்களை இரத்து செய்யும் அதிகாரம் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உண்டு.

(உ) பதவிக்கு வழங்கப்படும் கடமைகள் :

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்* | *பதவியானது அனுமதிக்கப்பட்ட தரம்* | *அனுமதிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை* | *கடமைகள்* |
|---|---|---|---|
| விளையாட்டு உத்தியோகத்தர் | III | 18 | 1. விளையாட்டு பயிற்சி மத்திய நிலை யங்களை கிரமமாக பேணிச்செல்லல்.<br>i. பயிற்சி மத்திய நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து விளையாட்டுப் பொருட்கள் மற் றும் உபகரணங்களைப் பரா மரித்தல்.<br>ii. பயிற்சி மத்திய நிலையங்களுக் குச் சொந்தமான ஏனைய பொருட்கள் மற்றும் ஆதனங் களைப் பாதுகாத்தல்.<br>2. விளையாட்டுப் பயிற்றுவித்தல்களை எதிர்கால நிகழ்ச்சி திட்டங்களின் பிரகாரம் பேணிச்செல்லல்.<br>3. விளையாட்டு விடயத்திற்கு ஏற்புடைத் தான திட்டமிடல்.<br>4. i. விளையாட்டு வீரர்களின் சொந்த தகவல் அறிக்கை<br>ii. விளையாட்டு வீரர்களின் ஆற் றுகை அறிக்கை<br>iii. ஆராய்ச்சி அறிக்கை<br>iv. விளையாட்டு வீரர் வரவு ஆவ ணங்களைப் பேணிச் செல்லல்.<br>5. விளையாட்டுப் போட்டிகள், பயிற்சி முகாம்கள் என்பனவற்றை ஏற்பாடு செய்தல் மற்றும் போட்டி மத்தியத் துவம்<br>6. விளையாட்டு பணிப்பாளர் நாய கத்தின் அனுமதியின் கீழ் மாகாண விளையாட்டு அமைச்சு, கல்வி அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அல்லது ஏனைய அரசாங்க அல்லது அரசாங்க சார்பற்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களினால் நடாத்தப்படும் விளையாட்டு செயற்றிட்டங்கள் தொடர்பாக ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனைகளை வழங்குதல். |

03. **மாதாந்த சம்பள அளவுத் திட்டம்** :

இலக்கம் 10/2025 கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப - வகை 2 சேவை வகுதியின் (MT - 02) விளையாட்டு உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் (MT 02 - 2025) ரூபா 50,630.00 - 10 x 630 - 11 x 670 - 10 x 1,010 - 10 x 1,190 - ரூபா 86,300.00 (ஆரம்ப சம்பளப் படிநிலை) ரூ. 50,630.00 ஆகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் வழங்கப்படும் வேறு கொடுப்பனவுகளும் தங்களுக்கு உரித்துடையதாக அமையப் பெறும்.

04. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள்:**

(அ) **கல்வித் தகைமைகள்** :

I. சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

II. கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சையைத் தவிர) சாதாரண சித்திகளைகளைப் பெற்றிருத்தல்.

மற்றும்

III. விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் மாகாண மட்டத்தில் (மாவட்டங்களுக்கு இடையேயான) இடம்பெறும் போட்டிகளின் போது 1 ஆம் அல்லது 2 ஆம் இடங்களைப் பெற்றிருத்தல், தேசிய விளையாட்டுப் பெருவிழாவில் 1, 2 அல்லது 3 ஆம் இடங்களைப் பெற்றிருத்தல், விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினால் நடாத்தப்படும் தேசிய வீர முதன்மைப் போட்டிகளில் 1, 2 அல்லது 3 ஆம் இடங்களைப் பெற்றிருத்தல்

(ஆ)

I. சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

II. தெற்காசியப் போட்டிகள், ஆசிய போட்டிகள், பொதுநலவாய நாடுகளுக்கு இடையேயான போட்டிகள், ஒலிம்பிக் போட்டிகள், உலக வீரமுதன்மைப் போட்டிகள் என்பன தொடர்பாக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 1, 2 அல்லது 3 ஆம் இடங்கள் தொடர்பாகப் பதக்கங்களைப் பெற்றிருத்தல்.

மேற்குறிப்பிட்ட தகைமையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருடங்களினுள் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தேசிய தொழிற்தேர்ச்சி (NVQ 06) மட்டத்திலான விளையாட்டுத் துறைக்குரிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ஒன்றை முதல் மூன்று (03) வருடத்தினுள் பெற்றுக்கொள்ளாத உத்தியோகத்தர்களின் சேவையானது தகுதிக்காண் கால முடிவில் நிரந்தரமாக்கப்படாததுடன், அவர்களின் சம்பள உயர்வானது தற்காலிகமாக நிறுத்தப்படும். அவ்வாறு சம்பள உயர்வு தற்காலிகமாக நிறுத்தப்படுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர் ஒருவர் அவ்வாறு சம்பள உயர்வு தற்காலிகமாக நிறுத்தப்பட்ட திகதி தொடக்கம் இரண்டு (02) வருட காலத்தினுள் தேசிய தொழிற்திறமைசார் (NVQ 06) மட்டத்திலான விளையாட்டுத் துறைக்குரிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியொன்றை பெற்றுக்கொள்ளுவதற்கு தவறுவார் எனின் அவர்களின் நியமனம் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வினைத்திறமையின்மையின் காரணமாக முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

(இ) **அனுபவம்** :

ஏற்புடைய துறையில் சேவை அனுபவமானது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(ஈ) **உடற் தகைமைகள் :**

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உளத் திடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) **ஏனைய தகைமைகள்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

III. பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுவதன் பொருட்டு தேவையான சகல தகைமைகளையும் 2026.03.27 ஆம் திகதிக்கு அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஊ) **வயது:**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை:**

தொழிற்சார் பரீட்சையொன்றின் மற்றும் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையொன்றின் வாயிலாகத் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

(அ) **தொழிற்சார் பரீட்சை :**

உடற்றகைமை மதிப்பீட்டிற்காக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் விளையாட்டு மருத்துவ அலகினால் நடாத்தப்படும் செயன்முறை பரீட்சைகளில் சித்தியடைதல் வேண்டும். உடற்றகைமைப் பரிசோதனை யானது கீழ்வரும் அம்சங்களை உள்ளடக்கிக் காணப்படும். எதிர்த்தாக்க வேகம், நெகிழும் தன்மை, உதரத்தின் பலம், இரு கைகளின் பலம், துரிதம் நின்று நீளம் பாய்தல், வேகத் தாங்குதிறன்.

தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை

| | *புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்* | *ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு* | *தெரிவு செய்யப்படுவதற்கு கவனத்திற் கொள்ளப்படும் குறைந்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| 1. | மேலதிக கல்வித்தகைமைகள் | 10 | ஏற்புடையதாகாது |
| 2. | விளையாட்டுக்கள் தொடர்பான திறமைகள் | 70 | |
| 3. | விளையாட்டுப் பயிற்றுவித்தல், போட்டி மத்தியத் துவம்/போட்டிகளை ஒழுங்கு செய்தல் பற்றிய மேலதிக அனுபவம் | 15 | |
| 4. | நேர்முகப் பரீட்சையின்போது மேற்கொள்ளப்படும் திறமைகள் | 05 | |
| | மொத்தம் | 100 | |

தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களைப் பரிசோதித்தலானது தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின்போது மேற்கொள்ளப்படும்.

குறிப்பு :

i. தொழிற்சார் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

ii. மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய புள்ளி அளவுகள் உள்ளடங்கிய, ஒவ்வொரு தகைமையினையும் மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை தொடர்பாக விரிவான புள்ளித் திட்டமொன்றிற்கு அனுமதியளித்தல் நியமனஞ் செய்யும் அதிகாரியால் மேற்கொள்ளப்படும்.

iii. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் ஆற்றுகை ஒழுங்கு வரிசையின்படி மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விண்ணப்பதாரிகள் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப - வகை 2 (MT - 02-2025) சேவை வகுதியின் தரம் III விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

06. **நியமனம் வழங்கல் :**

i. வெற்றிடங்களின் எணிக்கை 18 ஆகும்.

வெற்றிடங்கள் தொடர்பாக சம புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்கள் காணப் படும் சந்தர்ப்பமொன்றில் அவ்வெற்றிடத்தை நிரப்புதல் பற்றிய தீர்மானமானது பொதுச் சேவை ஆணைக்குழுவின் இலக்கம் 01/2019 (II) சுற்றறிக்கையின் பிரகாரம் மேற் கொள்ளப்படும். நியமனம் செயல்வலுப்பெறும் தினமானது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

ii. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறன் ஒழுங்குவரிசையின் பிரகாரம் விளையாட்டு அபிவிருத்தித் திணைக் களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில் நுட்ப - வகை 2 சேவை வகுதியின் விளையாட்டு உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் தெரிவு செய்யப்படும் விண் ணப்பதாரர்களிடையே எவரேனும் ஒருவர் யாதே னும் காரணத்தினால் நியமனத்தினை ஏற்றுக் கொள்ளாமையோ அல்லது சேவைக்கு அறிக்கை யிடாமையோ காரணமாக வெற்றிடம் ஏற்படு மாயின் திறன் ஒழுங்கு வரிசையின் பிரகாரம் ஏனைய விண்ணப்பதாரர்களை தெரிவுசெய்து நியமனஞ் செய்தலானது விளையாட்டு அபி விருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத் தினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

07. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவத்தினை தாம் சேவைக்கு இணை வதற்கு எதிர்பார்க்கும் மொழியின் ஊடாகவே தயாரித்தல் வேண்டும்.

(ஆ) சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிப்போர் விண்ணப்பப் படிவங்களின் தலைப்புகளில் குறிப்பிடும் பதவிப் பெயரினை அம் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவமானது இவ் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு இணக்க மானதாக இருக்க வேண்டியத்துடன், அது 8 ½" x 12" (A4) தாளில் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரர் தனது சொந்த கையெழுத்தினாலேயே பூரணப்படுத்துதல் வேண்டும். கணினி மூலமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களையும் பயன்படுத்த முடியும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்புகளில் இலக்கம் 01 இலிருந்து 11 வரையில் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 12 இலிருந்து 15 வரையில் இரண்டாம் பக்கத்திலும்,எஞ்சியவற்றை ஏனைய பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப்படிவத்தினை தயாரித்தல் வேண்டும்.

(ஈ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பதிவுத் தபாலில் 2026.03.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பணிப்பாளர் நாயகம்" விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இலக்கம் 9, பிலிப் குணவர்த்தன மாவத்தை, கொழும்பு 7 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரடியாக வருகை தந்து கையளித்தலோ வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப - வகை 2 (MT - 02) சேவை வகுதியின் விளையாட்டு உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2026" எனும் வாசகத்தை தெளிவாக எழுதி இருத்தல் வேண்டும். 2026.03.27 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்ப படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கல்வித் தகமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் என்பவற்றை உறுதிப்படுத்துதல் தொடர்பாக சான்றுப்படுத்திய நிழற்படப் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(உ) கையொப்பத்தை சான்றுப்படுத்துதல் - தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டிருக்கும் விண் ணப்பதாரியொருவரின் கையொப்பத்தை ஏற் புடைய திணைக்களத்தின் பிரதானி அல்லது அவர் சார்பாக அவ்வாறு மேற்கொள்வதற்கு அதிகாரம் கொண்ட உத்தியோகத்தரினால் சான்றுப்படுத் தப்படுதல் வேண்டும். ஏனைய விண்ணப்ப தாரிகளின் கையொப்பங்களை அவற்றைச் சான்றுப்படுத்துவதற்கு உரிய அதிகாரம் கொண்ட ஒருவரால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்திய பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், வருடாந்தம் ரூபா 782,808.00 அல்லது அதற்கு மேல் சம்பளம் பெறும் அரசாங்கத்தின் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர், பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது தலைமை மதகுரு ஒருவர், ஏனைய ஆகமங்களின் வணக்கத்தலங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அல்லது வணக்கத்திற்குரிய கருதத்தக்க நிலைமை யினைக் கொண்ட ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ஊ) பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறுதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(எ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றி தெரிவிக்கப்படமாட்டாது. அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்ட சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய விண்ணப்பதாரர்கள் தொழில்சார் பரீட்சை தொடர்பாக அழைக்கப்படுவர். அது தொடர்பாக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவின் தொலைபேசி இலக்கம் 011-2694566 அல்லது 011-2697934 ஊடாக கிழமையொன்றின் வேலை நாட்களில் மு.ப. 8.30 இலிருந்து பி.ப 4.00 மணி வரையில் உசாவ முடியும். அவ்வாறு உசாவும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பதவியின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஏ) அரசாங்க திணைக்களங்கள்/ சபைகள்/கூட்டுத் தாபனங்கள் ஆகியவற்றில் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை சேவையாற்றும் திணைக்களத்தின் அல்லது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

குறிப்பு - விண்ணப்பதாரியொருவர் தொழிற்சார் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தலானது நியமனத்தை வழங்குவதன் பொருட்டான தகைமையாகக் கருதப்படமாட்டாது.

08. **பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனைகள் :**

விண்ணப்பதாரர் ஒருவர் தகைமையற்றவர் எனக் கண்டறியப்படும் பட்சத்தில் தொழில்சார் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் இடம் பெறும் காலத்திலோ அல்லது அதன் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பத் தன்மை இரத்து செய்யப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள யாதேனும் விடயமொன்று போலியானது எனத் தெரிந்திருந்தும் சமர்ப்பித்துள்ளமையானது வெளிப்படுமாயின், அவ்வாறு இல்லாவிடின் யாதேனும் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்றே மூடி மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து பதவியிறக்கப்படுவதற்கு உடன்பட்டவராவார். தொழில்சார் அல்லது கட்டமைக்கப்பட்ட பரீட்சைகள் நடத்துதல் அத்துடன் பெறுபேறுகளை வெளியிடல் சம்மந்தமாக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு விண்ணப்பதாரர்கள், உட்பட்டவராவர்.

09. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம் :**

தகைமைப் பரிசோதனையின் போது விண்ணப்பதாரர்கள் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இது தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(I) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் செல்லுபடியான தேசிய அடையாள அட்டை அல்லது

(II) செல்லுபடியான கடவுச்சீட்டு

10. **வேறு விடயங்கள் :**

மேற்படி ஒழுங்கு விதிகளில் கவனத்திற் கொள்ளப்படாத விடயங்கள் தொடர்பில் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11. இவ் அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாசகங்களிடையே ஏதேனும் வேறுபாடுகள் ஏற்பட்டால் அவ்விடத்தில் சிங்கள மொழியிலான வாசகம் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

S. அச்சுதன்,
பணிப்பாளர் நாயகம்.

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,
இலக்கம் 09, பிலிப் குணவர்த்தன மாவத்தை,
கொழும்பு 07,
2026, பெப்புருவரி 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப - வகை 2 சேவை வகுதியின் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

## Recruitment to the post of Management Assistant – Technical - Segment 2 Sports Officer of the Department of Sports Development – 2026

01. முழுப் பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :
உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN RATHNAYAKE)
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

02. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :
(உதாரணம்: H.M.S. RATHNAYAKE)
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

03. முழுப் பெயர் (தமிழில்) :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

04. நிரந்தர முகவரி (ஆங்கில பேரெழுத்துக்களில்) :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

05. நிரந்தர முகவரி (தமிழில்) :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

06. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

07. ஆண்/ பெண் பாலினம் :

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக) ஆண் - 0
பெண் - 1 ☐

08. கையடக்க தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

09. மின்னஞ்சல் (e-mail) முகவரி :.................................................................................

10. பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

11. விண்ணப்பப்படிவங்களைக் கோரும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

12. கல்வித் தகைமைகள் :

(அ) க.பொ.த (சா. தரம்)

பரீட்சை வருடம் :

பரீட்சைச் சுட்டெண் :

| *விடயம்* | *சித்தி* | *விடயம்* | *சித்தி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ஆ) க.பொ.த (உ. தரம்)

பரீட்சை வருடம் :

பரீட்சைச் சுட்டெண் :

| *விடயம்* | *சித்தி* | *விடயம்* | *சித்தி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

13. மேலதிகக் கல்வித் தகைமைகள் :

| *நிறுவனம்* | *பாடநெறியின் பெயர்* | *கால வரையறை* | *சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

14. சேவை அனுபவம் (முன்கூட்டிய சேவைக் காலம் மற்றும் நிறுவனம் பற்றிய விபரங்கள்) :

| சேவைக்காலம் இருந்து | வரை | பதவிப் பெயர் | சேவை நிலையம் |
|---|---|---|---|
| I. .................. | .................. | ............................... | ............................................. |
| II. .................. | .................. | ............................... | ............................................. |
| III. .................. | .................. | ............................... | ............................................. |

15. தொழிற் தகைமைகள் :

| *நிறுவனம்* | *பாடநெறியின் பெயர்* | *கால வரையறை* | *சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

16. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விளையாட்டுத்துறையில் காட்டப்பட்ட விசேட திறமைகள் :

| *வருடம்* | *போட்டித் தொடர்* | *காட்டப்பட்ட ஆற்றுகைகள்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

17. தாங்கள் ஏதேனும் குற்றம் தொடர்பாக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
(ஏற்புடைய கூட்டினுள் (✓) அடையாளத்தை இடுக). ஆம் எனில் விபரத்தைக் குறிப்பிடுக.

ஆம் ☐ இல்லை ☐

..........................................................................................................................................................................

18. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவகையில் மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் உண்மையானவை என உறுதிமொழிகின்றேன். உண்மைக்குப் புறம்பானது என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமாயின் நான் தகைமையற்றவராக்கப்படுவதற்கு கட்டுப்படுவதுடன், நியமனஞ் செய்யப்பட்ட பின்னர் அது பற்றி தெரியவருமாயின் எவ்வித நட்டயீடுகளுமின்றி நான் சேவையில் பதவியிறக்கப்படுவதற்கு கட்டுப்பட்டவனாவேன் என்பதனை நான் அறிவேன். மேலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பாக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிகின்றேன் என்பதனையும் உறுதிமொழிகின்றேன்.

திகதி :............................................. ...........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

19. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதல் : (தேவையற்ற சொற்களை வெட்டி நீக்குக).

இவ் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ....................................... அவர்களை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் என்பதனையும், அவன்/அவள் ............................... மாதம் ................... ஆம் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்..

சான்றுப்படுத்துபவரின் கையொப்பம் :.............................................
சான்றுப்படுத்துபவரின் முழுப்பெயர் :..............................................
பதவி :..............................................
முகவரி :..............................................
(பதவி முத்திரை)
திகதி :.............................................

**குறிப்பு** : விண்ணப்பப்படிவத்தை வர்த்தமானி அறிவித்தலின் 07 ஆம் பந்தியின் (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டவண்ணம் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும்.

20. நிறுவனத் தலைவரின் பரிந்துரை :

இவ் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கும் திரு. / திருமதி / செல்வி ................................ என்பவர் இவ் அமைச்சில்/ திணைக்களத்தில் / கூட்டுத் தாபனத்தில் / சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவராவதுடன் அவன் / அவள் மேற்கூறப்பட்ட பதவி தொடர்பாக தெரிவுசெய்யப்பட்டால் இந் நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது.

..................................................................... பதவி முத்திரை :
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :...............................................

நிறுவனத் தலைவரின் பெயர் :..............................................

பதவி :...............................................

சேவை நிலையத்தின் முகவரி :..............................................

02-456/1

---

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

## முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத - வகை 2 சேவை வகுதியின் உடற்பயிற்சி உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத - வகை 2 சேவை வகுதியின் உடற்பயிற்சி உதவியாளர் பதவியில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பாக இங்கு கீழே தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்யும் இலங்கை விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. மேற்படி ஆட்சேர்ப்பானது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத - வகை 2 சேவை வகுதியின் உடற்பயிற்சி உதவியாளர் பதவியில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்றது. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2026.03.27 ஆகும்.

03. **சேவை நிபந்தனைகள் :**

(அ) அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், 2014.02.21 ஆம் திகதி உடையதாக பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அவ் ஏற்பாடு களில் காணப்படும் அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங் களுக்கும், பொதுச்சேவை ஆணைக்குழுவின் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளில் காட்டப்பட்டுள்ள நிபந் தனைகள், தாபனக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு கீழ்ப்பட்டதாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஒருவர் உடற்பயிற்சி உதவியாளர் பதவிக்கு நியமிக்கப் படுவார்.

(ஆ) இந் நியமனம் நிரந்தரமானதும். ஓய்வூதியம் உடையதுமாகும். அந்நியமனம் ஓய்வூதியம் உடையது எனக் காட்டப்பட்டிருப்பினும், எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத் தர்கள் ஓய்வூதிய சம்பள முறைமை பற்றி அரசாங்கத்தினால் எதிர் காலத்தில் எடுக்கப் படும் கொள்கை ரீதியான தீர்மானங் களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அனாதை கள் ஓய்வூதிய சம்பள முறைமைக்கு/ தபுதாரர் அல்லது அநாதைகள் ஓய்வூதிய சம்பள முறைமைக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் விதமாக தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புப் பணத்தினைச் செலுத் துதல் வேண்டும்.

(இ) இந் நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டது. முகாமைத்துவ உதவி யாளர் தொழில்நுட்பமல்லாத - வகை 2 சேவை வகுதியின் (MN 01) உடற்பயிற்சி உதவி யாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப் பட்டு 03 வருட காலத்திற்குள் ஆட்சேர்ப்பு

ஒழுங்குவிதிமுறைகளில் குறிப்பிடப்பட்டவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஈ) தனக்கு அளிக்கப்படும் பதவியின் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் நியமனங்களை இரத்து செய்யும் அதிகாரம் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உண்டு.

பதவிக்கு வழங்கப்படும் கடமைகள் :

| *அங்கீகரிக்கப்பட்டப் பதவிப் பெயர்* | *பதவியானது அனுமதிக்கப்பட்ட தரம்* | *அனுமதிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை* | *கடமைகள்* |
|---|---|---|---|
| உடற்பயிற்சி உதவியாளர் | III | 08 | 1. உடற்றகைமைகளை இனங்கண்டு பொருந்தும் விதமாக உடற்பயிற்சிகளை திட்டமிடல் மற்றும் பிரயோக ரீதியாக பயிற்சியளித்தல்.<br>2. பொறிகள் மற்றும் உபகரணங்களை நல்ல நிர்வகிப்புடன் பேணிச் செல்லல்.<br>3. பொறிகள் மற்றும் உபகரணங்களை பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகள் பற்றி உகந்த விதமாக அறிவித்தல்.<br>4. சரியான கட்டணங்களை அறவிடுதல், பதிவுகளை மேற்கொள்ளுதல் சரியாக கணக்கு வைத்தல்.<br>5. தேசிய குழாம்கள் மற்றும் ஏனைய விளையாட்டுத் தேவைகளை உகந்த விதத்தில் ஒதுக்கீடு செய்தல் மற்றும் ஆவணங்களைச் சரியாகப் பேணுதல்.<br>6. விளையாட்டு மருத்துவ நிறுவகத் துடன் தொடர்புகளைப் பேணியவாறு போசணைத் தேவைப்பாடுகள் பற்றி அறிவுறுத்தல்களை வழங்குதல்.<br>7. உபாதை நிலைமைகளுக்கு உட் பட்டிருக்கும் விளையாட்டு வீர வீராங் கனைகள் தொடர்பாக உடற்பயிற்சி செயற்றிட்டத் தொடரொன்றை தயாரித்தலும் பயிற்றுவித்தலும். |

03. **மாதாந்த சம்பள அளவுத் திட்டம் :**

இலக்கம் 10/2025 கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத - வகை 2 சேவை வகுதியின் (MN 01) உடற்பயிற்சி உதவியாளர் III ஆம் தரத்திற்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் (MN 01 – 2025) ரூ.45,230 – 10 x 540 – 11 x 630 – 10 x 890 – 10 x 1,190 - ரூ.78,360 - (ஆரம்ப சம்பளப் படிநிலை ரூ. 45,230.00) ஆகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் வழங்கப்படும் வேறு கொடுப்பனவுகளும் தங்களுக்கு உரித்துடையதாக அமையப் பெறும்.

04. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள்:**

(அ) **கல்வித் தகைமைகள்** :

சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்திலேனும் (சாதாரண பொதுப் பரீட்சையைத் தவிர) சித்தியடைந்திருத்தல்.

(ஆ) **தொழில்சார் தகைமைகள் :**

துறையில் பெற்றுள்ள தொழில்சார் தகைமைகள் விசேட தகைமையாகக் கருதப்படும். உடற்றகைமை தொடர்பாக 02 வாரங்களுக்கு மேற்பட்ட பயிற்சிப் பாடநெறியொன்றினைத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(இ) **அனுபவம்** :

ஏற்புடைய துறையில் சேவை அனுபவமானது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(ஈ) **உடற் தகைமைகள் :**

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உளத் திடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) **ஏனைய தகைமைகள்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
III. பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுவதன் பொருட்டு தேவையான சகல தகைமைகளையும் 2026.03.27 ஆம் திகதிக்கு அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஊ) **வயது:**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை:**

தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையொன்றின் வாயிலாகத் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை :

| *புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்* | *ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு* | *தெரிவு செய்யப்படுவதற்கு கவனத்திற் கொள்ளப்படும் குறைந்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | ஏற்புடையதாகாது |
| 2. துறைக்குரிய அனுவபம் மற்றும் விளையாட்டுக்கள் தொடர்பான திறமைகள் | 30 | |
| 3. உடற்றகைமை | 20 | |
| 4. தொழிற்றகைமை | 30 | |
| 5. நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமைகள், தலைமைத்துவம், உளப்பாங்கு, ஆளுமை மற்றும் தொடர்பாடற் திறன் | 05 | |
| மொத்தம் | 100 | |

06. **நியமனம் வழங்கல் :**

i. வெற்றிடங்களின் எணிக்கை 08 ஆகும்.

வெற்றிடங்கள் தொடர்பாக சம புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்கள் காணப் படும் சந்தர்ப்பமொன்றில் அவ் வெற்றிடத்தை நிரப்புதல் பற்றிய தீர்மானமானது பொதுச் சேவை ஆணைக்குழுவின் இலக்கம் 01/2019 (II) சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். நியமனம் செயல்வலுப்பெறும் தினமானது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

ii. தகைமை நேர்முகப் பரீட்சையின் போது பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் திறன் ஒழுங்குவரிசையின் பிரகாரம் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத - வகை 2 சேவை வகுதியின் உடற்பயிற்சி உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களிடையே எவரேனும் ஒருவர் யாதேனும் காரணத்தினால் நியமனத்தினை ஏற்றுக் கொள்ளாமையோ அல்லது சேவைக்கு அறிக்கையிடாமையோ காரணமாக வெற்றிடம் ஏற்படுமாயின் திறன் ஒழுங்குவரிசையின் பிரகாரம் ஏனைய விண்ணப்பதாரர்களை தெரிவுசெய்து நியமனஞ் செய்தலானது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

07. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவத்தினை தாம் சேவைக்கு இணைவதற்கு எதிர்பார்க்கும் மொழியின் ஊடாகவே தயாரித்தல் வேண்டும்.

(ஆ) சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிப்போர் விண்ணப்பப் படிவங்களின் தலைப்புகளில் குறிப்பிடும் பதவிப் பெயரினை அம் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவமானது இவ் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு இணக்கமானதாக இருக்க வேண்டியத்துடன், அது 8 ½" x 12" (ஏ4) தாளில் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரர் தனது சொந்த கையெழுத்தினாலேயே பூரணப் படுத்துதல் வேண்டும். கணினி மூலமாக தயாரிக்கப் பட்ட விண்ணப்பப்படிவங்களையும் பயன்படுத்த முடியும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்புகளில் இலக்கம் 01 இலிருந்து 11 வரையில் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 12 இலிருந்து 15 வரையில் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சியவற்றை ஏனைய பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப் படிவத்தினை தயாரித்தல் வேண்டும்.

(ஈ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பதிவுத் தபாலில் 2026.03.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பணிப்பாளர் நாயகம்" விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இலக்கம் 9, பிலிப் குணவர்த்தன மாவத்தை, கொழும்பு 7 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரடியாக வருகை தந்து கையளித்தலோ வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத - வகை 2 சேவை வகுதியின் உடற்பயிற்சி உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2026" எனும் வாசகத்தை தெளிவாக எழுதி இருத்தல் வேண்டும். 2026.03.27 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்ப படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கல்வித் தகமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் என்பவற்றை உறுதிப்படுத்துதல் தொடர்பாக சான்றுப்படுத்திய நிழற்படப் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(உ) **கையொப்பத்தை சான்றுப்படுத்துதல்** - தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டிருக்கும் விண்ணப் பதாரியொருவரின் கையொப்பத்தை ஏற்புடைய திணைக்களத்தின் பிரதானி அல்லது அவர் சார்பாக அவ்வாறு மேற்கொள்வதற்கு அதிகாரம் கொண்ட உத்தியோகத்தினால் சான்றுப்படுத்தப் படுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பங்களை அவற்றைச் சான்றுப்படுத்துவதற்கு உரிய அதிகாரம் கொண்ட ஒருவரால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்திய பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், வருடாந்தம் ரூபா 782,808 அல்லது அதற்கு மேல் சம்பளம் பெறும் அரசாங்கத்தின் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர், பௌத்த விகாரையொன்றின் விகாரதிபதி அல்லது தலைமை மதகுரு ஒருவர், ஏனைய ஆகமங்களின் வணக்கத்தலங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அல்லது வணக்கத்திற்குரிய கருதத்தக்க நிலைமையினைக் கொண்ட ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ஊ) பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப் படும். தபாலில் விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறுதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(எ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றி தெரிவிக்கப்படமாட்டாது. அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்ட சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய விண்ணப்பதாரர்கள் தொழில்சார் பரீட்சை தொடர்பாக அழைக்கப்படுவர். அது தொடர்பாக விளையாட்டு அபிவிருத்தித் திணைக் களத்தின் நிர்வாகப் பிரிவின் தொலைபேசி இலக்கம் 0112694566 அல்லது 0112697934 ஊடாக கிழமையொன்றின் வேலை நாட்களில் மு.ப. 8.30 இலிருந்து பி.ப 4.00 மணி வரையில் உசாவ முடியும். அவ்வாறு உசாவும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பதவியின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஏ) அரசாங்க திணைக்களங்கள்/சபைகள்/கூட்டுத் தாபனங்கள் ஆகியவற்றில் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் விண்ணப்பதாரிகள் தமது விண் ணப்பப்படிவங்களை சேவையாற்றும் திணைக் களத்தின் அல்லது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு** - விண்ணப்பதாரியொருவர் தொழிற்சார் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமூக மளித்தலானது நியமனத்தை வழங்குவதன் பொருட்டான தகைமையாகக் கருதப்படமாட்டாது.

08. **பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனைகள் :**

விண்ணப்பதாரர் ஒருவர் தகைமையற்றவர் எனக் கண்டறியப்படும் பட்சத்தில் தொழில்சார் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் இடம் பெறும் காலத்திலோ அல்லது அதன் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பத் தன்மை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள யாதேனும் விடயமொன்று போலியானது எனத் தெரிந்திருந்தும் சமர்ப்பித்துள்ளமையானது வெளிப் படுமாயின், அவ்வாறு இல்லாவிடின் யாதேனும் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்றே மூடி மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து பதவியிறக்கப்படுவதற்கு உடன்பட்டவராவார். தொழிற்சார் அல்லது கட்டமைக்கப்பட்ட பரீட்சைகள் நடத்துதல் அத்துடன் பெறுபேறுகளை வெளியிடல் சம்மந்தமாக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு விண்ணப்பதாரர்கள் உட்பட்டவராவர்

09. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம் :**

தகைமைப் பரிசோதனையின் போது விண்ணப்ப தாரர்கள் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இது தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(I) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக் கப்படும் செல்லுபடியான தேசிய ஆளடையாள அட்டை ; அல்லது

(II) செல்லுபடியான கடவுச்சீட்டு.

10. வேறு விடயங்கள்

மேற்படி ஒழுங்கு விதிகளில் கவனத்திற்கொள்ளப் படாத விடயங்கள் தொடர்பில் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11. இவ் அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாசகங்களிடையே ஏதேனும் வேறுபாடுகள் ஏற்பட்டால் அவ்விடத்தில் சிங்கள மொழியிலான வாசகம் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்

S. அச்சுதன்,
பணிப்பாளர் நாயகம்.

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,
இலக்கம் 09, பிலிப் குணவர்த்தன மாவத்தை,
கொழும்பு 07,
2026, பெப்புருவரி 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத - வகை 2 சேவை வகுதியின் உடற்பயிற்சி உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

## Recruitment to the post of Management Assistant Non – Technical - Segment 2 Exercise Assistant of the Department of Sports Development – 2026

01. முழுப் பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :
(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN RATHNAYAKE)
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

02. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :
(உதாரணம்: H.M.S. RATHNAYAKE)
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

03. முழுப் பெயர் (தமிழில்) :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

04. நிரந்தர முகவரி (ஆங்கில பேரெழுத்துக்களில்) :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

05. நிரந்தர முகவரி (தமிழில்) :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

06. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

07. ஆண்/ பெண் பாலினம் :

உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக) ஆண் - 0
பெண் - 1

| |
|---|
| |

08. கையடக்க தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

09. மின்னஞ்சல் (e-mail) முகவரி :................................................................................

10. பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

11. விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

12. கல்வித் தகைமைகள் :

(அ) க.பொ.த. (சா. தரம்)

பரீட்சை வருடம் : 

பரீட்சைச் சுட்டெண் : 

| *விடயம்* | *சித்தி* | *விடயம்* | *சித்தி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ஆ) க.பொ.த. (உ. தரம்)

பரீட்சை வருடம் : 

பரீட்சைச் சுட்டெண் : 

| *விடயம்* | *சித்தி* | *விடயம்* | *சித்தி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

13. மேலதிகக் கல்வித் தகைமைகள் :

| *நிறுவனம்* | *பாடநெறியின் பெயர்* | *கால வரையறை* | *சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

14. சேவை அனுபவம் (முன்கூட்டிய சேவைக் காலம் மற்றும் நிறுவனம் பற்றிய விபரங்கள்) :

| சேவைக்காலம் இருந்து | வரை | பதவிப் பெயர் | சேவை நிலையம் |
|---|---|---|---|
| I. .................. | .................. | ................................ | .............................................. |
| II. .................. | .................. | ................................ | .............................................. |
| III. .................. | .................. | ................................ | .............................................. |

15. தொழிற் தகைமைகள் :

| *நிறுவனம்* | *பாடநெறியின் பெயர்* | *கால வரையறை* | *சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

16. தாங்கள் ஏதேனும் குற்றம் தொடர்பாக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
(ஏற்புடைய கூட்டினுள் (✓) அடையாளத்தை இடுக). ஆம் எனில் விபரத்தைக் குறிப்பிடுக.

ஆம் ☐ இல்லை ☐

.............................................................................................................................................................................................

17. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவகையில் மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் உண்மையானவை என உறுதிமொழிகின்றேன். உண்மைக்குப் புறம்பானது என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமாயின் நான் தகைமையற்றவராக்கப்படுவதற்கு கட்டுப்படுவதுடன், நியமனஞ் செய்யப்பட்ட பின்னர் அது பற்றி தெரியவருமாயின் எவ்வித நட்டயீடுகளுமின்றி நான் சேவையில் பதவியிறக்கப்படுவதற்கு கட்டுப்பட்டவனாவேன் என்பதனை நான் அறிவேன். மேலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பாக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிகின்றேன் என்பதனையும் உறுதிமொழிகின்றேன்.

திகதி :............................................. ...........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

18. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதல் : (தேவையற்ற சொற்களை வெட்டி நீக்குக).

இவ் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ....................................... அவர்களை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் என்பதனையும், அவன்/அவள் ............................... மாதம் ................... ஆம் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்..

.............................................
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

சான்றுப்படுத்துபவரின் முழுப்பெயர் :.............................................
பதவி :.............................................
முகவரி :.............................................
(பதவி முத்திரை)
திகதி :.............................................

**குறிப்பு** : விண்ணப்பப்படிவத்தை வர்த்தமானி அறிவித்தலின் 07 ஆம் பந்தியின் (உ) பிரிவில் குறிப்பிடப்பட்ட வண்ணம் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும்.

19. நிறுவனத் தலைவரின் பரிந்துரை :

இவ் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு. / திருமதி / செல்வி ................................ என்பவர் இவ் அமைச்சில்/ திணைக்களத்தில் / கூட்டுத் தாபனத்தில் / சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவராவதுடன் அவன் / அவள் மேற்கூறப்பட்ட பதவி தொடர்பாக தெரிவுசெய்யப்பட்டால் இந் நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது.

.....................................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை :

திகதி :.............................................
நிறுவனத் தலைவரின் பெயர் :.............................................
பதவி :.............................................
சேவை நிலையத்தின் முகவரி :.............................................

02-456/2

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

## ஆரம்ப தரம் அரைத் தேர்ச்சிபெற்ற சேவை வகுதியின் கீழ் சமையற்காரர் பதவி தொடர்பான ஆட்சேர்ப்பு - 2026

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் ஆரம்ப தரம் அரைத் தேர்ச்சிபெற்ற சேவை வகுதியின் கீழ் சமையற்காரர் பதவியில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பாக இங்கு கீழே தரப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்யும் இலங்கை ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. மேற்படி ஆட்சேர்ப்பானது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் ஆரம்ப - அரைத் தேர்ச்சிபெற்ற சேவை வகுதியின் கீழ் காணப்படும் சமையற்காரர் பதவி தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்றது. விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2026.03.27 ஆகும்.

02. **சேவை நிபந்தனைகள் :**

(அ) அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், 2014.02.21 ஆம் திகதி உடையதாக பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அவ் ஏற்பாடுகளில் காணப்படும் அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங் களுக்கும், பொதுச்சேவை ஆணைக்குழுவின் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள், தாபனக்கோவை மற்றும் நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு கீழ்ப்பட்டதாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஒருவர் சமையற் காரர் பதவிக்கு நியமிக்கப்படுவார்.

(ஆ) இந் நியமனம் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உடையதுமாகும். இந் நியமனம் ஓய்வூதியம் உடையது எனக் காட்டப்பட்டிருப்பினும், எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் ஓய்வூதிய சம்பள முறைமை பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய சம்பள முறைமைக்கு / தபுதாரர் அல்லது அநாதைகள் ஓய்வூதிய சம்பள முறைமைக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் விதமாக தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புப் பணத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

(இ) இந் நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டது. ஆரம்ப - அரைத் தேர்ச்சிபெற்ற சேவை வகுதியின் (PL 2)சமையற்காரர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருட காலத்திற்குள் ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஈ) தனக்கு அளிக்கப்படும் பதவியின் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் நியமனங்களை இரத்து செய்யும் அதிகாரம் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உண்டு.

பதவிக்கு வழங்கப்படும் கடமைகள் :

| *அங்கீகரிக்கப்பட்டப் பதவிப் பெயர்* | *பதவியானது அனுமதிக்கப்பட்ட தரம்* | *அனுமதிக்கப் பட்டப் பதவிகளின் எண்ணிக்கை* | *கடமைகள்* |
|---|---|---|---|
| சமையற்காரர் | III | 01 | 1. சர்வதேச மட்டத்திலான மற்றும் தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டித் தொடர்களை இலக்காக கொண்டு திணைக்களத்தின் வாயிலாக நடாத்திச் செல்லப்படும் பயிற்சிக் குழாம்களின் விடுதிகளில் தங்கியிருக்கும் விளை யாட்டு வீர வீராங்கனைகள் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட உணவுப் பட்டியல்களின் பிரகாரம் சுத்தமாகவும் மற்றும் சுகாதார பாதுகாப்புடையதாகவும் போசணை உடை யதாக உணவுகளைத் தயாரித்தல். |

| *அங்கீகரிக்கப்பட்டப் பதவிப் பெயர்* | *பதவியானது அனுமதிக்கப்பட்ட தரம்* | *அனுமதிக்கப் பட்டப் பதவிகளின் எண்ணிக்கை* | *கடமைகள்* |
|---|---|---|---|
| | | | 2. நாட்டின் பல்வேறுபட்ட நிலையங்களில் வருடாந்தம் இடம்பெறும் தேசிய விளை யாட்டுப் பெருவிழா மற்றும் அவ்வாறான ஏனைய விளையாட்டு விழாக்களின் போது ஒவ்வொரு நிகழ்ச்சி தொடர்பாகவும் பங்குகொள்ளும் விளையாட்டு வீர வீராங் கனைகள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக தீர்மானிக்கப்பட்ட உணவுப் பட்டியல்களின் பிரகாரம் சுத்தமாகவும் மற்றும் சுகாதார பாதுகாப்புடையதாகவும் போசணை உடையதாக உணவுகளைத் தயாரித்தல். |

03. **மாதாந்த சம்பள அளவுத் திட்டம் :**

இலக்கம் 10/2025 கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் ஆரம்ப - அரைத் தேர்ச்சிபெற்ற சேவைத் தொகுதியின் கீழ் (PL2) சமையல்காரர் III ஆம் தரத்திற்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் (PL 02 - 2025) ரூபா 41,800 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - ரூபா 65,560.00 (ஆரம்ப சம்பளப் படிநிலை ரூ. 41,800.00) ஆகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் வழங்கப்படும் வேறு கொடுப்பனவுகளும் தங்களுக்கு உரித்துடையதாக அமையப் பெறும்.

04. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் :**

(அ) **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) **தொழில்சார் தகைமைகள் :**

உணவுப் பானங்களைத் தயாரித்தல் மற்றும் உபசரித்தல் தொடர்பாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்சார் கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வித் தகைமைகளில் குறைந்தபட்சம் இரண்டாம் மட்ட (NVQ - 02) தகைமையைப் பெற்றிருக்க வேண்டும்.

(இ) **அனுபவம் :**

பதவிக்கு ஏற்புடைய துறையில் இரண்டு வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ் அனுபவத்தினை சான்றிதழின் வாயிலாக உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஈ) **உடற் தகைமைகள்** :

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உளத் திடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) **ஏனைய தகைமைகள்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
III. பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுவதன் பொருட்டு தேவையான சகல தகைமைகளையும் 2026.03.27 ஆம் திகதிக்கு அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஊ) **வயது:**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை:**

தகைமைகளை மதிப்பீடு செய்யும் தொழில்சார் பரீட்சையொன்றின் வாயிலாகவும் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் வாயிலாகவும் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

(அ) **தொழில்சார் பரீட்சை :**

துறைக்கு ஏற்புடைய அறிவானது பரீட்சிக்கப்படும்.

| | *விடயம்* | *உச்சளவுப் புள்ளி அளவு* | *சித்தியடைவதற்குரிய புள்ளி அளவு* |
|---|---|---|---|
| 01. | துறைக்கு ஏற்புடைய அடிப்படை அறிவு | 20 | 40% |
| 02. | உணவுகளைத் தயாரிக்கும்போது அவசியமாக அமையப்பெறும் அறிவு | 20 | |
| 03. | பல்வகைப்பட்ட உணவுகளைத் தயாரித்தல் தொடர்பான அறிவு | 40 | |
| 04. | சமையலுக்காகப் பயன்படுத்தப்படும் உபகர ணங்கள் பற்றிய அறிவு | 20 | |
| | மொத்தம் | 100 | 40% |

(ஆ) **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை:**

i. விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் விண்ணப்பதாரர்களின் விடயம் தொடர்பான அறிவு, மேலதிகக் கல்வித் தகைமைகள், மேலதிக தொழிற்தகைமைகள் மற்றும் நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் திறன்கள் என்பவற்றை மதிப்பீடு செய்வதற்காக கீழே தரப்பட்டுள்ள நடைமுறையின் பிரகாரம் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதன் போது பெற்றுக் கொள்ளக்கூடிய உச்சளவு புள்ளிகளின் எண்ணிக்கை நூறாகும் (100).

| *புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்* | *ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு* | *தெரிவு செய்யப்படுவதற்கு கவனத்திற் கொள்ளப்படும் குறைந்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் | 25 | ஏற்புடையதாகாது |
| 2. மேலதிக தொழிற் தகைமைகள் | 35 | |
| 3. மேலதி அனுபவம் | 35 | |
| 4. நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

06. **நியமனம் வழங்கல் :**

i. வெற்றிட எணிக்கை 01 ஆகும்

வெற்றிடம் தொடர்பாக சம புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்கள் காணப் படும் சந்தர்ப்பமொன்றில் அவ் வெற்றிடத்தை நிரப்புதல் பற்றிய தீர்மானமானது பொதுச் சேவை ஆணைக்குழுவின் இலக்கம் 01/2019 (II) சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். நியமனம் செயல்வலுப்பெறும் தினமானது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

ii. தொழிற்சார் பரீட்சையின் போது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையின் போது பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறன் ஒழுங்குவரிசையின் பிரகாரம் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆரம்ப நிலை - அரை தேர்ச்சிபெற்ற சேவை வகுதியின் சமையல்காரர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களிடையே எவரேனும் ஒருவர் யாதேனும் காரணத்தினால் நியமனத்தினை ஏற்றுக் கொள்ளாமையோ அல்லது சேவைக்கு அறிக்கையிடாமையோ காரணமாக வெற்றிடம் ஏற்படுமாயின் திறன் ஒழுங்குவரிசையின் பிரகாரம் ஏனைய விண்ணப்பதாரர்களை தெரிவுசெய்து நியமனஞ் செய்தலானது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானம் மேற் கொள்ளப்படும்.

07. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவத்தினை தாம் சேவைக்கு இணை வதற்கு எதிர்பார்க்கும் மொழியின் ஊடாகவே தயாரித்தல் வேண்டும்.

(ஆ) சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிப்போர் விண்ணப்பப் படிவங்களின் தலைப்புகளில் குறிப்பிடும் பதவிப் பெயரினை அம் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவமானது இவ் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு இணக்கமானதாக இருக்க வேண்டியத்துடன், அது 8 ½" x 12" (A4) தாளில் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரர் தனது சொந்த கையெழுத்தினா லேயே பூரணப்படுத்துதல் வேண்டும். கணினி மூலமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங் களையும் பயன்படுத்த முடியும். விண்ணப்பப் படிவத்தின் தலைப்புகளில் இலக்கம் 01 இலிருந்து 11 வரையில் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 12 இலிருந்து 15 வரையில் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சியவற்றை ஏனைய பக்கத்திலும் உள்ளடங்கு மாறு விண்ணப்பப்படிவத்தினை தயாரித்தல் வேண்டும்.

(ஈ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பதிவுத் தபாலில் 2026.03.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பணிப்பாளர் நாயகம்" விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இலக்கம் 9, பிலிப் குணவர்த்தன மாவத்தை, கொழும்பு 7 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரடியாக வருகை தந்து கையளித்தலோ வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆரம்ப - அரைத்தேர்ச்சி சேவை வகுதியின் சமையல்காரர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2026" எனும் வாசகத்தை தெளிவாக எழுதி இருத்தல் வேண்டும். 2026.03.27 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்ப படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கல்வித் தகமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் என்பவற்றை உறுதிப்படுத்துதல் தொடர்பாக சான்றுப்படுத்திய நிழற்பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(உ) கையொப்பத்தை சான்றுப்படுத்துதல் - தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டிருக்கும் விண்ணப்ப தாரியொருவரின் கையொப்பத்தை ஏற்புடைய திணைக்களத்தின் பிரதானி அல்லது அவர் சார்பாக அவ்வாறு மேற்கொள்வதற்கு அதிகாரம் கொண்ட உத்தியோகத்தினால் சான்றுப்படுத்தப் படுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பங்களை அவற்றைச் சான்றுப்படுத் துவதற்கு உரிய அதிகாரம் கொண்ட ஒருவரால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்திய பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், வருடாந்தம் ரூபா 782,808.00 அல்லது அதற்கு மேல் சம்பளம் பெறும் அரசாங்கத்தின் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர், பௌத்த விகாரையொன்றின் விகாரதிபதி அல்லது தலைமை மதகுரு ஒருவர், ஏனைய ஆகமங்களின் வணக்கத்தலங்களுக்குப் பொறுப் பாகவுள்ள அல்லது வணக்கத்திற்குரிய கருதத்தக்க நிலைமையினைக் கொண்ட ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ஊ) பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப் படும். தபாலில் விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறுதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(எ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றி தெரிவிக்கப்பட மாட்டாது. அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்ட சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய விண்ணப்பதாரர்கள் தொழில்சார் பரீட்சை தொடர்பாக அழைக்கப்படுவர். அது தொடர்பாக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவின் தொலைபேசி இலக்கம் 0112694566 அல்லது 0112697934 ஊடாக கிழமையொன்றின் வேலை நாட்களில் மு.ப. 8.30 இலிருந்து பி.ப 4.00 மணி வரையில் உசாவ முடியும். அவ்வாறு உசாவும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பதவியின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஏ) அரசாங்க திணைக்களங்கள்/ சபைகள்/கூட்டுத் தாபனங்கள் ஆகியவற்றில் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் விண்ணப்பதாரிகள் தமது விண் ணப்பப்படிவங்களை சேவையாற்றும் திணைக் களத்தின் அல்லது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு** - விண்ணப்பதாரியொருவர் தொழிற்சார் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தலானது நியமனத்தை வழங்குவதன் பொருட்டான தகைமையாகக் கருதப்படமாட்டாது.

08. **பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனைகள்:**

விண்ணப்பதாரர் ஒருவர் தகைமையற்றவர் எனக் கண்டறியப்படும் பட்சத்தில் தொழில்சார் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் இடம் பெறும் காலத்திலோ அல்லது அதன் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பத் தன்மை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள யாதேனும் விடயமொன்று போலியானது எனத் தெரிந்திருந்தும் சமர்ப்பித்துள்ளமையானது வெளிப்படு மாயின், அவ்வாறு இல்லாவிடின் யாதேனும் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்றே மூடி மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து பதவியிறக்கப்படுவதற்கு உடன்பட்டவராவார். தொழிற் சார் அல்லது கட்டமைக்கப்பட்ட பரீட்சைகள் நடத்துதல் அத்துடன் பெறுபேறுகளை வெளியிடல் சம்மந்தமாக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு விண்ணப்பதாரர்கள் உட்பட்டவராவர்

09. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம் :**

தகைமைப் பரிசோதனையின் போது விண்ணப்ப தாரர்கள் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இது தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(I) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக் கப்படும் செல்லுபடியான தேசிய அடையாள அட்டை அல்லது

(II) செல்லுபடியான கடவுச்சீட்டு.

10. **வேறு விடயங்கள் :**

மேற்படி ஒழுங்கு விதிகளில் கவனத்திற் கொள்ளப் படாத விடயங்கள் தொடர்பில் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11. இவ் அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாசகங்களிடையே ஏதேனும் வேறுபாடுகள் ஏற்பட்டால் அவ்விடத்தில் சிங்கள மொழியிலான வாசகம் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்

S. அச்சுதன்,
பணிப்பாளர் நாயகம்.

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,
இலக்கம் 09, பிலிப் குணவர்த்தன மாவத்தை,
கொழும்பு 07.
2026, பெப்புருவரி 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆரம்ப தரம் அரைத் தேர்ச்சிபெற்ற சேவை வகுதியின் கீழ் சமையற்காரர் பதவி தொடர்பான ஆட்சேர்ப்பு - 2026**

**Recruitment to the Post of Primary Level - Semi Skilled Service Cook of the Department of Sports Development – 2026**

01. முழுப் பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :
(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN RATHNAYAKE)
.................................................................................................................................................................
.................................................................................................................................................................

02. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :
(உதாரணம்: H.M.S. RATHNAYAKE)
.................................................................................................................................................................
.................................................................................................................................................................

03. முழுப் பெயர் (தமிழில்) :
.................................................................................................................................................................
.................................................................................................................................................................

04. நிரந்தர முகவரி (ஆங்கில பேரெழுத்துக்களில்) :
.................................................................................................................................................................
.................................................................................................................................................................

05. நிரந்தர முகவரி (தமிழில்) :
.................................................................................................................................................................
.................................................................................................................................................................

06. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

07. ஆண்/ பெண் பாலினம் :

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக) ஆண் - 0
பெண் - 1 | |

08. கையடக்க தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

09. மின்னஞ்சல் (e-mail) முகவரி :..............................................................................

10. பிறந்த திகதி :

ஆண்டு : | | | | |  மாதம் : | | |  திகதி : | | |

11. விண்ணப்படிவங்களைக் கோரும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் : | | | | |  மாதங்கள் : | | |  நாட்கள் : | | |

12. கல்வித் தகைமைகள் :

(அ) க.பொ.த. (சா. தரம்) : முதலாம் தடவை

பரீட்சை வருடம் :

பரீட்சைச் சுட்டெண் :

| *விடயம்* | *சித்தி* | *விடயம்* | *சித்தி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ஆ) க.பொ.த. (சா. தரம்) : இரண்டாம் தடவை

பரீட்சை வருடம் :

பரீட்சைச் சுட்டெண் :

| *விடயம்* | *சித்தி* | *விடயம்* | *சித்தி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

13. மேலதிகக் கல்வித் தகைமைகள் :

| *நிறுவனம்* | *பாடநெறியின் பெயர்* | *கால வரையறை* | *சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

14. சேவை அனுபவம் (முன்கூட்டிய சேவைக் காலம் மற்றும் நிறுவனம் பற்றிய விபரங்கள்) :

| சேவைக்காலம் இருந்து | வரை | பதவிப் பெயர் | சேவை நிலையம் |
|---|---|---|---|
| I. ................... | .................. | ................................ | .............................................. |
| II. ................... | .................. | ................................ | .............................................. |
| III. ................... | .................. | ................................ | .............................................. |

15. தொழிற் தகைமைகள் :

| *நிறுவனம்* | *பாடநெறியின் பெயர்* | *கால வரையறை* | *சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

16. தாங்கள் ஏதேனும் குற்றம் தொடர்பாக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
(ஏற்புடைய கூட்டினுள் (✓) அடையாளத்தை இடுக). ஆம் எனில் விபரத்தைக் குறிப்பிடுக.

ஆம் ☐ இல்லை ☐

.......................................................................................................................................................................................

17. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவகையில் மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் உண்மையானவை என உறுதிமொழிகின்றேன். உண்மைக்குப் புறம்பானது என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமாயின் நான் தகைமையற்றவராக்கப்படுவதற்கு கட்டுப்படுவதுடன், நியமனஞ் செய்யப்பட்ட பின்னர் அது பற்றி தெரியவருமாயின் எவ்வித நட்டயீடுகளுமின்றி நான் சேவையில் பதவி நீக்கப்படுவதற்கும் கட்டுப்பட்டவனாவேன் என்பதனை நான் அறிவேன். மேலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பாக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிகின்றேன் என்பதனையும் உறுதிமொழிகின்றேன்.

திகதி :............................................. ...........................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

18. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதல் : (தேவையற்ற சொற்களை வெட்டி நீக்குக).

இவ் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ....................................... அவர்களை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் என்பதனையும், அவன்/அவள் ............................... மாதம் ................... ஆம் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்..

............................................

சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

சான்றுப்படுத்துபவரின் முழுப்பெயர் :.............................................
பதவி :.............................................
முகவரி :.............................................
(பதவி முத்திரை)
திகதி :.............................................

**குறிப்பு** : விண்ணப்பப்படிவத்தை வர்த்தமானி அறிவித்தலின் 07 ஆம் பந்தியின் (உ) பிரிவில் குறிப்பிடப்பட்ட வண்ணம் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும்.

19. நிறுவனத் தலைவரின் பரிந்துரை :

இவ் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கும் திரு. / திருமதி / செல்வி ................................ என்பவர் இவ் அமைச்சில்/ திணைக்களத்தில் / கூட்டுத் தாபனத்தில் / சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவராவதுடன் அவன் / அவள் மேற்கூறப்பட்ட பதவி தொடர்பாக தெரிவுசெய்யப்பட்டால் இந் நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது.

.........................................................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பதவி முத்திரை :

திகதி :.............................................
நிறுவனத் தலைவரின் பெயர் :.............................................
பதவி :.............................................
சேவை நிலையத்தின் முகவரி :.............................................

02-456/3

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

## ஆரம்ப தரம் தொழில்நுட்பமல்லாத சேவை வகுதியின் விளையாட்டுத் தள உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் ஆரம்ப தரம் ஆரம்ப தொழில்நுட்பமல்லாத சேவை வகுதியின் விளையாட்டுத் தள உதவியாளர் பதவியில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பாக இங்கு கீழே தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்யும் இலங்கை ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. மேற்படி ஆட்சேர்ப்பானது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் ஆரம்ப தரம் - தொழில்நுட்பமல்லாத சேவை வகுதியின் விளையாட்டுத் தள உதவியாளர் பதவியில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்றது. விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் தினம் 2026.03.27 ஆந் திகதியாகும்.

02. **சேவை நிபந்தனைகள் :**

(அ) அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், 2018.06.26 ஆம் திகதி உடையதாக பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அவ் ஏற்பாடுகளில் காணப்படும் அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும், பொதுச்சேவை ஆணைக்குழுவின் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு கீழ்ப்பட்டதாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் விளையாட்டுத் தள உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

(ஆ) இந் நியமனம் நிரந்தரமானதும். ஓய்வூதியம் உடையதுமாகும். இந் நியமனம் ஓய்வூதியம் உடையது எனக் காட்டப்பட்டிருப்பினும், எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் ஓய்வூதிய சம்பள முறைமை பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய சம்பள முறைமைக்கு / தபுதாரர் அல்லது அனாதைகள் ஓய்வூதிய சம்பள முறைமைக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் விதமாக தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புப் பணத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

(இ) இந் நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டது. அரம்ப தரம் தொழில்நுட்பமல்லாத - சேவை வகுதியின் (PL 01) விளையாட்டுத் தள உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருட காலத்திற்குள் ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிமுறைகளில் குறிப்பிடப்பட்டவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஈ) தனக்கு அளிக்கப்படும் பதவியின் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் நியமனங்களை இரத்துசெய்யும் அதிகாரம் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உண்டு.

பதவிக்கு வழங்கப்படும் கடமைகள் :

அதில் குறைந்தது நான்கு (04) பாடங்களில் திறமை சித்திகள் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரம்) பரீட்சையில், பொது உளச்சார்பு (General Common Test) தவிர, குறைந்தது மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

- **உள் விண்ணப்பதாரர்கள் :**

(அ) ஆரம்ப நிலை – தொழில்நுட்பமற்ற, அரைத் தொழில்நுட்ப மற்றும் தொழில் நுட்ப சேவைப் பிரிவுகளில், கீழே குறிப்பிடப்பட்ட “ஆ”, “ஏ”, “இ” தகுதிகளை கொண்ட பணியாளர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் / தமிழ், கணிதம் மற்றும் ஆங்கில மொழி ஆகிய பாடங்களை உட்பட, ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்று, அதில் குறைந்தது நான்கு (04) பாடங்களில் திறமை சித்திகள் பெற்றிருக்க வேண்டும்.

(இ) சேவையில் நிரந்தர நியமனம் பெற்ற வராக இருந்து, அந்த நியமனம் உறுதிப் படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(ஈ) நிர்ணயிக்கப்பட்ட திகதிக்குள், நிரந்தர நியமனத்தின் கீழ் (அல்லது நிரந்தர நியமனத்திற்கு அண்மையான நிலையில்) குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

குறிப்பு : (1) எந்தவொரு பதவிக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் பணியாற்றியிருந்த பயிற்சிக் காலப்பகுதி, அல்லது ஒரு பதவிக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நிபந்தனையாக மேற் கொள்ளப்பட்ட பயிற்சி சேவை காலம், மேற்கூறிய “இ” உபபிரிவில் குறிப் பிடப்பட்டுள்ள தகுதி பெறுவதற்கான ஐந்து (05) வருட கால எல்லைக்குள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. மேலும், எந்தவொரு பதவிக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் பணியாற்றியிருந்த தற்காலிக அல்லது தற்காலிக (casual) சேவை காலப் பகுதிகளும், மேற்கூறிய “இ” உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி பெறுவதற்கான ஐந்து (05) வருட சேவை காலத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

ii. **உடற்தகுதிகள் :**

சகல விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்த வொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு, போதுமானளவிலான உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

iii. **ஏனைய தகைமைகள் :**

(அ) சிறந்த குணநலன் கொண்டவராக இருக்க வேண்டும்;

(ஆ) விண்ணப்பக் கடைசி நாளுக்குள், பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ய தேவையான அனைத்து தகுதிகளும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

03. **வேலைவாய்ப்பு விதிமுறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

i. இந்தப் பதவி நிரந்தரமானது.

ii. வெளி விண்ணப்பதாரர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் ஒரு அதிகாரி மூன்று (03) ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார், மேலும் அவர் தகுதிகாண் காலத்தில் தனது கடமைகளையும் நடத்தையையும் திருப்திகரமாகப் பராமரித்திருந்தால், தகுதிகாண் காலத்தின் முடிவில் அவர் பதவியில் நிரந்தரமாக்கப்படுவார். தகுதிவாய்ந்த சேவைப் பிரிவுப் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட உள் விண்ணப்பதாரர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட வர்களை நியமிக்க ஒரு தகுதிகாண் காலம் நிர்ணயிக் கப்படலாம்.

iii. இந்த நியமனம் பொது சேவை ஆணைய நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிறுவனக் குறியீடு, அரசாங்க நிதி விதிமுறைகள் மற்றும் பிற துறை உத்தரவுகளுக்கு உட்பட்டது.

04. **வயதெல்லை:**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி யின்படி 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு

மேற்படாமலும் இருக்க வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு உள் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.

05. **சம்பளத் திட்டம் :**

MA 1-1 2025 - ரூபா 46,220.00 - 10x540 - 7x 630 - 4 x 890 – 20 x 1,190 - ரூபா 83,390.00

(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்க. 01/2025 இன் அட்டவணை II இன் படி உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.)

06. **தகுதி மதிப்பீட்டு கட்டமைக்கப்பட்ட நேர்காணலின் போது புள்ளிகள் வழங்கப்படுவதற்கான விதிமுறை பின்வருமாறு உள்ளது.**

| | | |
|---|---|---|
| 1. | தொடர்புடைய அனுபவம் | 30 புள்ளிகள் |
| 2. | தொடர்புடைய மேலதிக கல்வித் தகைமைகள் | 30 புள்ளிகள் |
| 3. | பிற திறன்கள் /செயல்திறன் | 15 புள்ளிகள் |
| 4. | நேர்காணல் திறன் | 25 புள்ளிகள் |
| | மொத்தப் புள்ளிகள் | 100 |

**குறிப்பு**:தகுதிமதிப்பீட்டுநேர்முகப்பரீட்சையின்போது, சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களில் தொடர்புடைய கால வரம்புகள் குறிப்பிடப்படவில்லை என்றால், அத்தகைய சான்றிதழ்களுக்கான தொடர்புடைய கால வரம்புகளை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து எழுத்துபூர்வ உறுதிப்படுத்தலைப் பெறுவது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். குறிப்பிட்ட காலக்கெடு இல்லாத மற்றும் செல்லுபடியாகும் தன்மை உறுதிப்படுத்தப்படாத சான்றிதழ்கள் புள்ளிகள் வழங்குவதற்கு பரிசீலிக்கப்படாது.

07. **விண்ணப்பதாரர்களின் அடையாளம் :**

தகுதி மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படு வதற்கானவர்கள், அனைத்து வகையிலும் முழுமையாக விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களே ஆகும்.

நேர்முகப்பரீட்சையின் போது, அனைத்து சான்றி தழ்களின் அசல் நகல்கள் மற்றும் சரியாக சான்றளிக்கப் பட்ட நகல்களை சமர்ப்பிக்க வேண்டும்.

நேர்முகப்பரீட்சையின் போது, தங்களது அடை யாளத்தை உறுதிசெய்யுவதற்காக கீழ்க்காணும் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

08. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய முறை:**

i. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026.03.27 அன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு சேவைகள் பிரிவு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, கோட்டே என்ற முகவரிக்கு பதிவு தபாலில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த திகதிக்குப் பின்பு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ii. சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவிப்பின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை A4 அளவிலான காகிதத்தில் தயார் செய்து, முதல் பக்கத்தில் இலக்கம் 01 முதல் 03 வரை, இரண்டாவது பக்கத்தில் இலக்கம் 04 முதல் 06 வரை, மூன்றாவது பக்கத்தில் இலக்கம் 07 முதல் 08 வரை வருமாறு ஒழுங்குபடுத்தி, தங்களது கையொப்பத்துடன் முழுமையாக நிரப்ப வேண்டும்.

iii. விண்ணப்பம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில், “பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயல்படும் இரசாயன ஆயுத சம வாயத்தை செயற்படுத்துவதற்கான தேசிய அதிகாரசபையின் நிர்வாக உதவியாளர் (தொழில்நுட்பமற்ற) – நிரந்தர பதவி" என தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

iv. விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்க பாடசாலையின் அதிபர் / நீதிமன்ற அலுவலர்/ சத்திய ஆணையாளர் / வழக்கறிஞர் / புகழ்பெற்ற நியாயவாதி / முப்படை இராணுவ அதிகாரியொருவர் அல்லது ரூ. 72,280.00 அடிப்படை மாத சம்பளத்தை பெற்றிருக்கும் அரசாங்க நிரந்தர பதவியில் உள்ள அதிகாரி ஒருவரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

v. தற்போது அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையில் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள், தங்களது விண்ணப்பங்களை தாங்கள் பணியாற்றும் துறைத் தலைவரின் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

vi. இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்து போவது அல்லது தாமதமாக வருவது தொடர்பான எந்தப் புகாரும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

09. **பொய்யான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான தண்டனைகள்:**

நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட எந்த தகவலும் உண்மைக்கு எதிரானதாக அல்லது தவறானதாக இருப்பது, நியமிப்புக்கு முன்பு தெரிய வந்தால், உங்கள் விண்ணப்பத்துக்கு செல்லுபடியாகாது. அந்தப் பிழையான அல்லது தவறான தகவல் நியமிக்கப்பட்ட பிறகு வெளிப்பட்டால், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணியிடத்திலிருந்து நீக்கப்படுவீர்கள்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் வெளியிடப்பட்டுள்ள இவ் அறிவித்தலின் மொழி உரைகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது முரண்பாடு இருப்பதாகத் தோன்றினால், அத்தகைய சந்தர்ப்பத்தில், சிங்கள மொழிமூலமான அறிவித்தலின் படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டாலோ அல்லது இந்த ஆட்சேர்ப்புச் செயல்பாட்டின் போது ஏதேனும் சிக்கல் நிறைந்த சூழ்நிலை ஏற்பட்டாலோ, நியமன அதிகாரியான தேசிய அதிகாரசபையின் வழிநடத்தல் குழுவால் எடுக்கப்படும் முடிவுகள் இறுதியானவை.

தேசிய அதிகாரசபையின் வழிநடத்தல் குழுவின் வழிகாட்டுதலின்படி,

செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு,

பாதுகாப்பு தலைமையக வளாகம்,
ஸ்ரீ ஜெயவர்த்தனபுர,
கோட்டே.
2026, பெப்புருவரி.
மேலதிக தகவல்களை www.defence.lk இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயல்படும் இரசாயன ஆயுத சமவாயத்தை செயற்படுத்துவதற்கான தேசிய அதிகாரசபையின் நிர்வாக உதவியாளர் – தொழில்நுட்பமற்ற சேவை வகுப்பைச் சேர்ந்த நிர்வாக உதவியாளர் (தொழில்நுட்பமற்ற) நிரந்தர பதவிகளுக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளல்**

| | |
|---|---|
| நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் மொழி ஊடகம் | |

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

(சரியான எண்ணை பெட்டியில் எழுதவும் (சிங்களம்-2 /தமிழ்-3 / ஆங்கிலம்-4))

**குறிப்பு: விண்ணப்பிக்கும் மொழி ஊடகத்தை மாற்ற முடியாது.**

---

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி :

……………………………………………………………………………………………………

(ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்)

1.2 முழுப் பெயர் : ……………………………………………………………………………………

(ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்)

1.3 முழுப் பெயர் : (தமிழில்/சிங்களத்தில்)

……………………………………………………………………………………………………

02. 2.1 நிரந்தர முகவரி (தமிழில்/சிங்களத்தில்) :

……………………………………………………………………………………………………

2.2 நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்)

……………………………………………………………………………………………………

2.3 தொலைபேசி இலக்கம் :

நிலையானது : ……………………………………… கையடக்க : ………………………………………

03. 3.1 இனம் : ☐ சிங்களம் -1 தமிழ் - 2 முஸ்லீம் - 3 ஏனையவை - 4

3.2 பால் : ☐ ஆண் -1 பெண் - 2

(உரிய கூட்டினுள் இலக்கத்தை எழுதவும்)

3. 3 திருமணமானவர் / திருமணமாகாதவர்: ☐ திருமணமானவர் - 1

(உரிய கூட்டினுள் இலக்கத்தை எழுதவும்) திருமணமாகாதவர் - 2

3.4 பிறந்த திகதி: ஆண்டு : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

3.5 2025.12.31 ஆம் திகதியன்று வயது:

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐

3.6 தேசிய ஆளடையாள அட்டை: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 கல்வித் தகைமை :

4.1.1 கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண) பரீட்சை :

| *தொடர் இல.* | *பாடம்* | *சித்தி* | *ஆண்டு* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

4.1.2 கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரம்) பரீட்சை :

| *தொடர் இல.* | *பாடம்* | *சித்தி* | *ஆண்டு* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

4.2 பதவிக்குப் பொருத்தமான அனுபவம் :.......................................................

4.3 மேலதிக் கல்வி / தொழில்முறை தகைமைகள்:

(i) நிறுவனம் : ..........................................................
(ii) தகுதி : ..........................................................
(iii) தகுதி நடைமுறைக்கு வரும் திகதி : ..........................................................

05. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தில் ஏதேனும் குற்றச்சாட்டிற்காக தண்டிக்கப்பட்டிருக்கிறீர்களா?

(தயவுசெய்து பொருத்தமான பெட்டியில் ( ✓ ) அடையாளத்தை இடவும்) (ஆம் எனில், தயவுசெய்து விளக்கவும்)

| ஆம் | | | இல்லை | |
|---|---|---|---|---|

.............................................................................................................................................................................

.............................................................................................................................................................................

06. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

இந்த விண்ணப்பப் படிவத்தில் நான் வழங்கிய தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்றும், அனைத்துப் பிரிவுகளும் சரியாக நிரப்பப்பட்டுள்ளன என்றும் நான் அறிவிக்கிறேன். எனது இந்தக் கூற்று தவறானது என நிரூபிக்கப்பட்டால், நியமனத்திற்கு முன்பே நான் தகுதி நீக்கம் செய்யப்படுவேன், நியமனத்திற்குப் பிறகு பணிநீக்கம் செய்யப்படுவேன் என்பதையும், அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும் நான் உட்பட்டவன் என்பதையும் நான் அறிவேன்.

...................... ..............................................
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

07. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

அரசாங்கப் பாடசாலையின் அதிபர்/சமாதான நீதிபதி /சத்திய ஆணையாளர் /வழக்கறிஞர் / பொது நொத்தாரிசு / முப்படை அதிகாரி அல்லது ரூ. 72,280.00 க்கும் அதிகமான அடிப்படை மாத சம்பளத்தைப் பெறும் அரசின் நிரந்தர பதவியிலுள்ள அதிகாரி ஒருவரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

இந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் திரு./திருமதி/செல்வி .............................................. அவர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் ......................................................... அன்று என் முன்னிலையில் தனது கையொப்பத்தை பதித்ததாகவும் நான் சான்றளிக்கிறேன்.

..................... ........................................................
திகதி கையொப்பத்தை சான்றளிக்கும் அதிகாரியின் கையொப்பம்

முழுப் பெயர் : ..............................................
பதவி :..............................................

(அதிகாரப்பூர்வ முத்திரையுடன் உறுதிப்படுத்தவும்)

08. விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் இருந்தால், திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல் :

மேலே குறிப்பிடப்பட்ட விவரங்களைக் கொண்ட திரு./திருமதி/செல்வி ...................................................................... இந்நிறுவனத்தில் பணியாற்றி வருவதாகவும், வழங்கிய தகவல்கள் சரியானவை என்றும், பணிச்செயலும் வருகையும் திருப்திகரமாக உள்ளன என்றும், அவருக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டுகளும் இல்லை என்றும், இந்தப் பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்நிறுவன சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் நான் சான்றளிக்கிறேன்.

.............................................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்

முழுப் பெயர் : ..............................................
திகதி :.............................................
பதவி :..............................................
முகவரி :……………………………………

(அதிகாரப்பூர்வ முத்திரையுடன் உறுதிப்படுத்தவும்)

02-504/3

**பாதுகாப்பு அமைச்சு**

பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயல்படும் இரசாயன ஆயுத சமவாயத்தை செயற்படுத்துவதற்கான தேசிய அதிகாரசபையின் முதன்மை – தொழில்நுட்பமற்ற சேவைப் பிரிவைச் சேர்ந்த அலுவலக உதவியாளர் (Office Assistant) பதவி (நிரந்தரம்) திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்

பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள இரசாயன ஆயுத சமவாயத்தை செயற்படுத்துவதற்கான தேசிய அதிகார சபையின் முதன்மை தொழில்நுட்பம் அல்லாத சேவை பிரிவில் அலுவலக உதவியாளர் பதவிக்கு நிரந்தர அடிப்படையில் 01 வெற்றிடத்தை நிரப்ப விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்யும் இலங்கை குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு முறை :**

அரசாங்க வர்த்தமானியில் விளம்பரங்கள் வெளியிடு வதன் மூலமோ அல்லது பொது விளம்பரம் மூலமாகவோ விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. நியமன அதிகாரியால் நியமிக்கப்பட்ட குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், தரம் III க்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுகிறது.

i. இந்த சேவைப் பிரிவிற்குரிய அனைத்து நியமனங்கள் மற்றும் ஆட்சேர்ப்புகள் மட்டுமல்லாமல், அந்த சேவைப் பிரிவிற்குள் மேற்கொள்ளப்படும் பதவி உயர்வுகளும், இந்நடவடிக்கை விதிமுறை களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஒழுங்குவிதிகளுக்கும் கடுமையாக இணங்கிய வாறு மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

ii. ஆட்சேர்ப்புக்குப் பின்னர் பணியமர்த்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற இணைப்புச் சார்ந்த விடயங்கள் தொடர்பாக, நிறுவனத்தின் செயற்பாட்டு நடைமுறைச் சுருக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் நடைமுறைக்கு உட்படும்.

iii. இந்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப் பிடப்பட்டுள்ள அனைத்து அம்சங்களுக்கும் தொடர்பாக, இங்கே வழங்கப்பட்ட விதி முறைகள் நிறுவனத்தின் செயற்பாட்டு நடை முறைச் சுருக்கத்தில் உள்ள விதிமுறைகளை மீறி செயல்படுத்தப்பட வேண்டும்.

நியமன அதிகாரி என்பது தேசிய அதிகாரசபையின் செயல்பாட்டு குழுவாக இருக்கும்.

02. **தேவையான தகுதிகள் :**

i. **தகைமைகள் :**

- வெளிப்புற விண்ணப்பதாரர்கள்:

  கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சைக்கு தோற்றுதல்.

ii. உடற்தகுதிகள் :

சகல விண்ணிப்பதாரரும் இலங்கையின் எந்த வொரு பிரதேசத்திலும் பணிpயாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு, போது மானளவிலான உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்

iii. **ஏனைய தகைமைகள் :**

(அ) சிறந்த குணநலன் கொண்டவராக இருக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பக் கடைசி நாளுக்குள், பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ய தேவையான அனைத்து தகுதிகளும் முழுமையாக பூர்த்தி செய்யப் பட்டிருக்க வேண்டும்.

03. **வேலைவாய்ப்பு விதிமுறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

i. இந்தப் பதவி நிரந்தரமானது.

ii. சேவை/பதவியின் தரம் III க்கு நியமிக்கப்படும் ஒரு ஊழியர் மூன்று (03) ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார், மேலும் அவர் தகுதிகாண் காலத்தில் தனது கடமைகளையும், நடத்தையையும் திருப்திகரமாகப் பராமரித்து, முதல் செயல்திறன் தடை தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தால், தகுதிகாண் காலத்தின் முடிவில் அவர் சேவை/ பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்.

iii. இந்த நியமனம் பொது சேவை ஆணைய நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிறுவனக் குறியீடு, அரசாங்க நிதி விதிமுறைகள் மற்றும் பிற துறை உத்தரவுகளுக்கு உட்பட்டது.

04. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின்படி 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

05. **சம்பளத் திட்டம்:**

PL 1 2025 - ரூபா 40,500.00 - 10x 450 – 10 x 490 - 7 x 540 – 15 x 590 – ரூபா 62,530.00

(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 01/2025 இன் அட்டவணை II இன் படி உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.)

06. தகுதி மதிப்பீட்டு கட்டமைக்கப்பட்ட நேர்காணலின் போது புள்ளிகள் வழங்கப்படுவதற்கான விதிமுறை பின்வருமாறு உள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | தொடர்புடைய அனுபவம் | 20 புள்ளிகள் |
| 2. | தொடர்புடைய மேலதிக கல்வித் தகைமைகள் | 20 புள்ளிகள் |
| 3. | நேர்காணல் திறன் | 60 புள்ளிகள் |
| | மொத்தப் புள்ளிகள் | 100 |

குறிப்பு: தகுதி மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையின் போது, சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களில் தொடர்புடைய கால வரம்புகள் குறிப்பிடப்படவில்லை என்றால், அத்தகைய சான்றிதழ்களுக்கான தொடர்புடைய கால வரம்புகளை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து எழுத்துபூர்வ உறுதிப்படுத்தலைப் பெறுவது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். குறிப்பிட்ட காலக்கெடு இல்லாத மற்றும் செல்லுபடியாகும் தன்மை உறுதிப்படுத்தப்படாத சான்றிதழ்கள் புள்ளிகள் வழங்குவதற்கு பரிசீலிக்கப்படாது.

07. **விண்ணப்பதாரர்களின் அடையாளம் :**

தகுதி மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கானவர்கள், அனைத்து வகையிலும் முழுமையாக விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களே ஆகும்.

நேர்முகப்பரீட்சையின் போது, அனைத்து சான்றிதழ்களின் அசல் நகல்கள் மற்றும் சரியாக சான்றளிக்கப்பட்ட நகல்களை சமர்ப்பிக்க வேண்டும்.

நேர்முகப்பரீட்சையின் போது, தங்களது அடையாளத்தை உறுதிசெய்யுவதற்காக கீழ்க்காணும் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

08. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய முறை :**

i. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026.03.27 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு சேவைகள் பிரிவு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, கோட்டே என்ற முகவரிக்கு பதிவு தபாலில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த திகதிக்குப் பின்பு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ii. சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவிப்பின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை A4 அளவிலான காகிதத்தில் தயார் செய்து, முதல் பக்க எண் 01 முதல் 03 வரை, இரண்டாவது பக்க எண் 04 முதல் 07 வரை, வருமாறு ஒழுங்குபடுத்தி, தங்களது கையெழுத்துடன் முழுமையாக நிரப்ப வேண்டும்.

iii. விண்ணப்ப உறையின் மேல் இடது மூலையில் "இரசாயன ஆயுத சமவாயத்தை செயற்படுத்துவதற்கான தேசிய அதிகாரசபையின் அலுவலக உதவியாளர் (நிரந்தர)" என்ற வார்த்தைகளால் குறிக்கப்பட வேண்டும்.

iv. விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்க பாடசாலையின் அதிபர் / நீதிமன்ற அலுவலர்/ சத்திய ஆணையாளர் / வழக்கறிஞர் / புகழ்பெற்ற நியாயவாதி / முப்படை இராணுவ அதிகாரியொருவர் அல்லது ரூ. 72,280.00 அடிப்படை மாத சம்பளத்தை பெற்றிருக்கும் அரசாங்க நிரந்தர பதவியில் உள்ள அதிகாரி ஒருவரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

v. இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்து போவது அல்லது தாமதமாக வருவது தொடர்பான எந்தப் புகாரும் ஏற்றுக்கொள்ளப்படாது.

09. **பொய்யான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான தண்டனைகள்:**

நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட எந்த தகவலும் உண்மைக்கு எதிரானதாக அல்லது தவறானதாக இருப்பது, நியமிப்புக்கு முன்பு தெரிய வந்தால், உங்கள் விண்ணப்பத்துக்கு செல்லுபடியாகாது. அந்தப் பிழையான அல்லது தவறான தகவல் நியமிக்கப்பட்ட பிறகு வெளிப்பட்டால், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணியிடத்திலிருந்து நீக்கப்படுவீர்கள்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் வெளியிடப்பட்டுள்ள இவ் அறிவித்தலின் மொழி உரைகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது முரண்பாடு இருப்பதாகத் தோன்றினால், அத்தகைய சந்தர்ப்பத்தில், சிங்கள மொழிமூலமான அறிவித்தலின் படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டாலோ அல்லது இந்த ஆட்சேர்ப்புச் செயல்பாட்டின் போது ஏதேனும் சிக்கல் நிறைந்த சூழ்நிலை ஏற்பட்டாலோ, நியமன அதிகாரியான தேசிய அதிகாரசபையின் வழிநடத்தல் குழுவால் எடுக்கப்படும் முடிவுகள் இறுதியானவை.

தேசிய அதிகாரசபையின் வழிநடத்தல் குழுவின் வழிகாட்டுதலின்படி,

செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு தலைமையக வளாகம்,
ஸ்ரீ ஜெயவர்த்தனபுர,
கோட்டே,
2026, பெப்புருவரி.
மேலதிக தகவல்களை www.defence.lk இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயல்படும் இரசாயன ஆயுத சமவாயத்தை செயற்படுத்துவதற்கான தேசிய அதிகாரசபையின் முதன்மை – தொழில்நுட்பமற்ற சேவைப் பிரிவைச் சேர்ந்த அலுவலக உதவியாளர் (Office Assistant) பதவி (நிரந்தரம்) திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்**

| நேர்காணலுக்கான மொழி | |
|---|---|

(அலுவலக உபயோகத்திற்கு)

(சரியான எண்ணை பெட்டியில் எழுதவும் (சிங்களம்-2 /தமிழ்-3 / ஆங்கிலம்-4))

குறிப்பு: விண்ணப்பிக்கும் மொழி ஊடகத்தை மாற்ற முடியாது.

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி :
……………………………………………………………………………
(ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்)

1.2 முழுப் பெயர் : ……………………………………………………………………
(ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்)

1.3 முழுப் பெயர் : (தமிழில்/சிங்களத்தில்)
……………………………………………………………………………

02. 2.1 நிரந்தர முகவரி (தமிழில்/சிங்களத்தில்) :
……………………………………………………………………………

2.2 நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்)
……………………………………………………………………………

2.3 தொலைபேசி இலக்கம் :
நிலையானது : ……………………………… கையடக்க : ………………………………

03. 3.1 இனம் : ☐ சிங்களம் -1 தமிழ் - 2 முஸ்லீம் - 3 ஏனையவை - 4

3.2 பால் : ☐ ஆண் -1 பெண் - 2

(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதவும்)

3.3 திருமணமானவர் / திருமணமாகாதவர்: ☐ திருமணமானவர் - 1

(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதவும்) திருமணமாகாதவர் - 2

3.4 பிறந்த திகதி: ஆண்டு : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

3.5 2025.12.31 ஆம் திகதியன்று வயது:

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐

3.6 தேசிய ஆளடையாள அட்டை இல.: | | | | | | | | | | | |

4.0 கல்வித் தகைமை

4.1. க.பொ.த. (சா.த.) பரீட்சை எழுதிய ஆண்டு : …………………………………………
(பரீட்சைக்குத் தோற்றியது பற்றி நிரூபிக்க சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும்)

4.2. பதவிக்குப் பொருத்தமான அனுபவம் : …………………………………………

4.3 மேலதிகக் கல்வி / தொழில்முறை தகைமைகள் :

(i) நிறுவனம் :…………………………………………
(ii) தகுதி :…………………………………………
(iii) தகுதி நடைமுறைக்கு வரும் திகதி :…………………………………………

05. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தில் ஏதேனும் குற்றச்சாட்டிற்காக தண்டிக்கப்பட்டிருக்கிறீர்களா?

(தயவுசெய்து பொருத்தமான பெட்டியில் (✓) எனும் அடையாளத்தை இடவும்) (ஆம் எனில், தயவுசெய்து விளக்கவும்)

| ஆம் | | | இல்லை | |
|---|---|---|---|---|

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

06. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் வழங்கிய தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்றும், அனைத்துப் பிரிவுகளும் சரியாக நிரப்பப்பட்டுள்ளன என்றும் நான் அறிவிக்கிறேன். எனது இந்தக் கூற்று தவறானது என நிரூபிக்கப்பட்டால், நியமனத்திற்கு முன்பே நான் தகுதி நீக்கம் செய்யப்படுவேன், நியமனத்திற்குப் பிறகு பணிநீக்கம் செய்யப்படுவேன் என்பதையும், அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும் நான் உட்பட்டவன் என்பதையும் நான் அறிவேன்.

………………… ………………………………………
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

07. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:
அரசாங்கப் பாடசாலையின் அதிபர்/சமாதான நீதவான் /சத்திய ஆணையாளர் /வழக்கறிஞர் / பொது நொத்தாரிசு / முப்படை அதிகாரி அல்லது ரூ. 72,280.00 க்கும் அதிகமான அடிப்படை மாத சம்பளத்தைப் பெறும் அரசின் நிரந்தர பதவியிலுள்ள அதிகாரி ஒருவரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

இந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் திரு./திருமதி/செல்வி ……………………………………… அவர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் ……………………………………… அன்று என் முன்னிலையில் தனது கையொப்பத்தை பதித்ததாகவும் நான் சான்றளிக்கிறேன்.

………………… ………………………………………
திகதி கையொப்பத்தை சான்றளிக்கும் அதிகாரியின் கையொப்பம்

முழுப் பெயர் : ………………………………………
திகதி :………………………………………
பதவி :………………………………………

(அதிகாரபூர்வ முத்திரையுடன் உறுதிப்படுத்தவும்)

02-504/4

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

### மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் மோட்டார் வாகன பரிசோதகர் தரம் III இற்கு (இலங்கை தொழில்நுட்ப சேவை) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025(2026)

இலங்கை தொழில்நுட்ப சேவையின் கீழ் காணப்படும், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் மோட்டார் வாகன பரிசோதகர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த ஆட்சேர்ப்புச் செய்தலானது போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன், அந்தப் போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

விண்ணப்பப்படிவங்கள் இலங்கைப் பரீட்சை திணைக்களத் தின் www.doenets.lk இணையத்தளத்தில் "Our Services" இன் கீழ் உள்ள "Online Application – Recruitment Exams/ E. B. Exams" ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் நிகழ்நிலை முறையில் (Online) மாத்திரமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கமுடியும். நிகழ்நிலையூடான விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல் 2026 மாச்சு மாதம் 03 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறக்கப்படுவதுடன் 2026 மாச்சு மாதம் 27 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.

தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி யொன்றைத் தமது தனிநபர் கோவையில் உள்ளடக்கு வதற்காக நிறுவனத் தலைவரிடம் கையளித்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்திய விண்ணப்பத்தின் பிரதியொன்றும் மற்றும் சேவையினை உறுதிப்படுத்தும் கடிதமும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி வரை தாமதிப்பதனால் ஏற்படுகின்ற எந்தவொரு பாதகமான சூழ்நிலைகளையும் விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் மோட்டார் வாகன பரிசோதகர் பதவிகளில் காணப்படும் 25 வெற்றிடங்களைப் பூர்த்திசெய்துகொள்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இதன் மூலம் கோரப்படுகின்றன. மோட்டார் வாகன பரிசோதகர் பதவி, மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் (203 ஆம் அத்தியாயம்) கீழ் விதித்துரைக்கப்பட்ட பணிகள் மற்றும் அதனோடு இணைந்த சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதலுக்குத் தேவையான நிபுணத்துவத்தைப் பரிசீ லித்தல், வாகனங்களைப் பதிவுசெய்யும்போது மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்திற்கு இணங்குகின்றமை பற்றி பரிசீலித்து அறிக்கையிடல், சாரதி ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை சபைகளுக்கும் வாகனங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் சபைகளிலும் பங்குபற்றுதல், பதிவினை இரத்துச் செய்வதற்காக வாகனங்களைப் பரிசீலித்து அறிக்கையிடுதல், திடீர் விபத்துக்கள் ஏற்படும் வாகனங்களைப் பரிசீலித்தல் மற்றும் அறிக்கையிடல், உடற் தகுதிச் சான்றிதழ் வழங்குதல், கராஜ்களைப் பரிசீலித்துத் தேவையான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல், சாரதி பாடசாலைகளைப் பரிசீலித்து தேவையான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல், ஓட்டுவதற்குப் பொருத்தமற்ற வாகனங்களுக்கு தடை உத்தரவுகளைச் சமர்ப்பித்தல் மற்றும் நீதிமன்றம் மற்றும் வேறு தொடர்புடைய நிறுவனங்களுக்கு வாகனங்கள் தொடர்பான நிபுணத்துவ அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் போன்ற கடமைகளைக் கொண்டதொரு பதவியாகும்.

01. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்:**

அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இற்கு அமைவாக தயாரித்து, இலக்கம்: PSC/EST/04-01-43/02/2018 மற்றும் 2018.06.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் மோட்டார் வாகன பரிசோதகர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் மோட்டார் வாகன பரிசோதகர் (இலங்கை தொழில்நுட்ப சேவை) III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர். இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடையது.

02. **சம்பள வகை மற்றும் அளவுத்திட்டம்:**

சம்பளக் குறியீட்டு இலக்கம் : MN 3 – 2025

சம்பள அளவுத் திட்டம்: ரூ.52,250.00-10x800-11x1,190-10x1,320-10x1,350-ரூ.100,040.00.

03. **கல்வித் தகைமைகள்:**

துறைக்குரிய விடயங்கள் இரண்டுடன், விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்பம் / பாடவிதானங்களுக்குரிய மூன்று பாடங்களுடன் க.பொ.த. (உ.த.) பரீட்சையினை ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

சிங்களம் / தமிழ் / ஆங்கில பாடங்கள், விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்குச் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (06)

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

04. **தொழில் தகைமைகள்:**

i. மொரட்டுவைப் பல்லைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (வாகன எந்திரவியல் துறைக்குரிய).

அல்லது

ii. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா (வாகன எந்திரவியல் துறைக்குரிய).

அல்லது

iii. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா (வாகன எந்திரவியல் துறைக்குரிய)

அல்லது

iv. இலங்கைத் திறந்த பல்கலைகழகத்தினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா (வாகன எந்திரவியல் துறைக்குரிய).

அல்லது

v. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் I ஆவது பகுதியினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல் (மோட்டார் பொறியியல் விஞ்ஞான பாடத்துடன்)

அல்லது

vi. வேலைவாய்ப்புத் துறைக்குரிய தேசிய தொழில்சார் தகைமை (NVQ) 06 மட்டத்தின் தகைமையினைப் பூர்த்திசெய்திருத்தல் (வாகன எந்திரவியல் துறைக்குரிய).

அல்லது

vii. உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேற்கூறிய தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதென்று உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடம் விசாரித்துக் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதென்று மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பிற தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

05. **அனுபவம்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மேற்கூறிய தொழில் நுட்பத் தகைமைகளைப் பெற்றதன் பின்னர், அரசாங்கத்தில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில்/ நியதிச்சட்ட சபையொன்றில் அல்லது கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டு, குறைந்தபட்சம் 10 ஊழியர்கள் சார்பில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் செலுத்தப்படுகின்ற, மோட்டார் வாகனங்களின் டீசல் மற்றும் பெற்றோல் என்ஜின், கியர் பெட்டி, டிபரன்ஷல், பிரேக் சிஸ்டம்கள், மின் அமைப்புகள், சஸ்பென்ஷன் சிஸ்டம்கள் போன்ற அனைத்து பாகங்களிலும் பழுதுபார்த்தல்களை மேற்கொள்கின்ற அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் கராஜ் ஒன்றில் வாகன எந்திரவியல் துறையில் குறைந்தபட்சம் 02 வருட மேற்பார்வை மட்டத்திலான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

06. **உடற் தகைமைகள்:**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றவும் மற்றும் பதவியின் கடமைகளைச் செய்யவும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியானவராக இருத்தல் வேண்டும்.

07. **வேறு:**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. சிறந்த நன்னடத்தையுடையவராய் இருத்தல் வேண்டும்.

iii. ஏதேனுமொரு மத பீடத்தில் துறவியொருவராக இருக்கின்ற எந்தவொரு நபரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறமாட்டார்கள்.

iv. அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப் படும் வாகனம் தவிர்ந்த, மோட்டார் சைக்கிள் (A), மோட்டார் கோச் (D) மற்றும் கனரக மோட்டார் லொறி (CE) ஆகியவற்றை ஓட்டுவதற்கான செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதியில் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

v. பரீட்சைக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதியன்று இப்பதவிக்குரிய அனைத்துத் தகைமைகளையும் சகல விண்ணப்ப தாரிகளும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களைப் பூர்த்திசெய்யும் அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையிலுள்ள சகல உத்தி யோகத்தர்களுக்கும் இதற்காக விண்ணப் பிக்கமுடியும்.

08. **வயதெல்லை:**

விண்ணப்பங்கள் கையேற்கப்படும் இறுதித் திகதி யில் 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு

மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய, 2007.12.28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1990.12.28 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னரான பிறந்த திகதியை உடையவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.)

**குறிப்பு:** தற்போது அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை உரியதல்ல.

09. **ஆட்சேர்ப்பு முறை:**

தற்போதுள்ள முழு வெற்றிடங்களும் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் என்பதுடன், எழுத்து மூலப் பரீட்சையின் மற்றும் தகைமைகளைப் பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புகள் செய்யப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களின் மொத்த மதிப்பெண்களின் திறமை ஒழுங்கின் அடிப்படையில், ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்கு சமமான தொகையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, பொருத்தமானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

10. **எழுத்துமூலப் பரீட்சை:**

| *வினாத்தாள்* | | *காலம்* | *மொத்த மதிப்பெண்* | *சித்தி பெறுவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 1. | மோட்டார் எந்திரவியல் தொடர்பான பொது அறிவு | 02 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. | பொது விவேகமும் நுண்ணறிவும் | 01 மணித்தியாலம் | 100 | 40% |

**பரீட்சைக்கான பாடப்பரப்புகள்**

| *வினாத்தாளின் பெயர்* | *பாடப்பரப்புகள்* |
|---|---|
| மோட்டார் எந்திரவியல் தொடர்பான பொது அறிவு | கீழ்க்காட்டப்பட்டுள்ள தொழில்நுட்பத் துறைகள் தொடர்பில் அடிப்படை அறிவும், இத்துறையில் உள்ள கோளாறுகள் தொடர்பில் அடிப்படை விளக்கமும்<br>1. டீசல் மற்றும் பெற்றோல் எஞ்சின்களின் செயற்பாடும், வலு உள்ளீடும்<br>2. கிளச்சு மற்றும் செலுத்தீடு முறைமை<br>3. மசகிடும் முறைமையும் குளிராக்கும் முறைமையும்<br>4. மின்சார முறைமை<br>5. பெற்றோல் மற்றும் டீசல் வாகனங்களின் எரிபொருள் முறைமை<br>6. கால் பிரேக் முறைமை, சக்கரங்களின் இயக்கத் திறனைப் பரீட்சிக்கும் உபகரணங்களைப் பரிசோதனை செய்தல், எதிர்விளைவு செயலாற்றல் காலம், நிறுத்தும் தூரம்<br>7. கைபிரேக் முறைமை<br>8. சக்கர ஒழுங்குபடுத்தலையும் ஸ்ரியரின் அமைப்பியலையும் பரீட்சிக்கும் உபகரணம்<br>9. தொங்கல் முறைமை<br>10. மோட்டார் வாகனமொன்றிற்கான தகுநிலை அறிக்கையொன்றைத் தயாரித்தல்<br>11. மோட்டார் வாகனமொன்றிற்கு தகுதிச் சான்றிதழொன்றைத் தயாரித்தல்<br>12. திணைக்களத்தின் பணிகள் மற்றும் மோட்டார் வாகன பரிசோதகரொருவருக்குரிய கடமைகள் தொடர்பான பொது அறிவு<br>13. வர்ணமிடுதல், ஒட்டுதல், பொருத்துதல் தொடர்பான பொது அறிவு<br>14. தன்னியக்க செலுத்தீடு. |

| *வினாத்தாளின் பெயர்* | *பாடப்பரப்புகள்* |
|---|---|
| பொது விவேகமும் நுண்ணறிவும் | இந்த வினாத்தாள் விண்ணப்பதாரர்களின் எண்ணியல் நிபுணத்துவம், தர்க்க ரீதியான ஆற்றல், பொது அறிவு ஆகியவற்றை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட விடயம்சார் வினாத்தாளாகும். |

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. நேர்முகப் பரீட்சை:

நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன், தகைமைகளைப் பரிசீலித்தல் மாத்திரமே மேற்கொள்ளப்படும்.

12. பரீட்சைக் கட்டணம்:

பரீட்சைக் கட்டணம் ரூ. 1200.00 வாகும். நிகழ்நிலை முறையில் வழங்கப்பட்ட பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மட்டுமே பரீட்சைக்கான கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கியினது கடனட்டை மூலம் (Any Bank Credit Card)
ii. இணையவழி கொடுப்பனவு வசதிகள் கொண்ட எந்தவொரு வங்கியின் பற்று அட்டைகள் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transaction)
iii. இலங்கை வங்கி நிகழ்நிலை வங்கி முறை / Flex செயலி மூலம் (online Banking Method/ Flex App of Bank of Ceylon)
iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலமாகவும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேலுள்ள முறைகளின் மூலம் கொடுப்பனவுகளைச் செலுத்தும் முறை பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கொடுப்பனவுகள் கிடைத்தமை பற்றி குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்துவதில் ஏற்படும் தவறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்புடையதல்ல.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட தொகை எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்துதல் அல்லது வேறு பரீட்சைகளுக்கு மாற்றுதல் ஆகியன மேற்கொள்ளப்படமாட்டாது.

13. விண்ணப்பிக்கும் முறை:

நிகழ்நிலை (online) பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். விண்ணப்தாரர்களினால் நிகழ்நிலையூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பம் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று / ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை கட்டமைப்புக்குள் பிரவேசிப்பதற்கு பயன்படுத்துகின்ற கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு ஒரு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரி மூலமாகவோ அறிவிக்கப்படும். நிகழ்நிலையினூடாக விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தைப் (Instruction) பதிவிறக்கவும். விண்ணப்பத்தை நிரப்பும்போது அந்த அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்படமாட்டாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் எந்தவித அறிவிப்பும் இல்லாமல் நிராகரிக்கப்படும்.

14. பரீட்சைக்குத் தோற்றுதல்:

(அ) வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்அனுமானத்தின் அடிப்படையில், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதியில் அல்லது அதற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான

அனுமதி அட்டைகள் நிகழ்நிலையூடாக மாத்திரமே வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், அது பற்றி இணையத்தள அறிவித்தல் மூலம் / விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கும். தமக்குரிய அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரரொருவராயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒருங்கிணைப்புக் கிளையில் அது குறித்து விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியினைச் சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதமொன்று இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்தறிதல் மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் யாதாயினும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். அனுமதி அட்டையினைப் பரீட்சித்துப்பார்த்து திருத்தங்கள் காணப்படுமாயின் நேரகாலத்துடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு அழைத்து விண்ணப்பத்திற்கு அமைவாக உரிய திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் / நேர்முகப் பரீட்சையின்போது திருத்தங்களை மேற்கொள் வதற்கான கோரிக்கைகள் கவனத்திற்கொள்ளப் படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தியொருவர் தனக்கு நிர்ணயிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றவேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் குறிப்பிட்ட பரீட்சை மண்டபத்தில் குறித்த கையொப்பம் உறுதிப்படுத்திய அனுமதி அட்டையினை முதலாவதாக அந்த மண்டபத்திற்கு வருகைதரும் திகதியிலேயே மண்டப பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைகள் தொடர்பாகக் கடைப்பிடிக்கப்படவேணடிய சட்ட வழிமுறைகள் இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை வழங்கு தலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்று ஏற்றுக்கொள்வதாகக் கருதுதல் ஆகாது.

(ஈ) பரீட்சையை நடத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்கள் மீறப்படுமிடத்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்படுவதற்கு நேரிடும்.

(உ) பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதி தீர்மானமாகும்.

15. பரீட்சார்த்தியின் ஆளடையாளம்:

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சை தொடர்பாக மண்டப பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஓர் ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அதேபோல் பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகத்தை மறைக்காமல் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் காதுகள் இரண்டையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் உட்பிரவேசித்தல் வேண்டும். இதற்கு உடன்படாத பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் உட்பிரவேசித்த நேரம் தொடக்கம் பரீட்சை முடிந்து வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகளை மறைக்காதிருத்தல் வேண்டும்.

16. கவனத்திற் கொள்ளவும்:

கேட்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தவறுகின்ற பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

17. நியமனத்திற்கான தெரிவு :

எழுத்துமூலப் பரீட்சையின் மற்றும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளில் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கமைவாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்த்துள்ள எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையானோர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர்.

18. பெறுபேறுகளை வெளியிடுதல்:

குறித்த பெறுபேறு ஆவணத்தை “மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்” த்திற்கு கையளிப்பதற்கு மேலதிகமாக பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியில் அறிவித்து அனுப்புதல் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும்.

19. பொய்யான தகவல்களை வழங்குதல்.

பரீட்சார்த்தியொருவருக்குத் தகைமைகள் இல்லையெனத் தெரியவரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்பதாக அல்லது பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சையின் பின்னரோ அல்லது வேறு எச்சந்தர்ப்பத்திலேனும் அவரது பரீட்சைக்குரிய அனுமதி இரத்துச் செய்யப்படக்கூடும். பரீட்சார்த்தியினால் தெரிந்து கொண்டே பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அல்லது ஏதேனுமொரு முக்கிய விடயமொன்று தெரிந்து கொண்டே மறைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவரும் பட்சத்தில், அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இடமுண்டு. இந்த விதிமுறைகளில் கருத்தில்கொள்ளப்படாத விடயங்கள் தொடர்பாக பகிரங்க சேவை ஆணைக்குழு தீர்மானிக்கின்றவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

20. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பினும், அவற்றிற்கிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுடையதாகும்.

கமல் அமரசிங்க,
மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம்.

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05,
2026 பெப்புருவரி 27.

2-505

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.